TANRECTA SPEAKS SEPTEMBER - 2019

Newspaper Reg.No.TNBIL/2003/12746, licensed to post with prepayment with postal Reg. No. Try/041/2017 - 2019
Posted at RMS, Trichy Junction, Trichy-620 001
Date of Posting - 5th of Every Month

To

______________________

______________________

______________________

டெலிவரி ஆகாவிடில் கீழ்காணும் முகவரிக்கு தயவு செய்து திரும்ப அனுப்பவும்
தி பிரிண்டிங் ஹவுஸ், காஜாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.

**பதிப்பாசிரியர் குழு**

1. முனைவர் T.N. கோகுல்நாத் பாபு, மாநிலத் தலைவர்
2. பேரா. இ.பி. பெருமாள், மாநில பொதுச் செயலாளர், பதிப்பாசிரியர்
3. பேரா. எம். பாலசுப்ரமணியன், மாநிலப் பொருளாளர்
4. முனைவர் ந. மாரிசாமி, மாநிலத் துணைத் தலைவர்
5. முனைவர் ம. இராஜகோபால், மாநிலத் துணைத் தலைவர்
6. பேரா. பார்வதி கோபாலன், மாநிலத் துணைத் தலைவர்
7. பேரா. S. சிவசண்முகம், மாநில இணைச் செயலாளர்
8. பேரா. S. சந்திரா, மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர்

**TANRECTA SPEAKS - TNBIL/2003/12746**

Owned, Edited and Published by Prof. E. P. Perumal, The General Secretary, Tamil Nadu Retired College Teachers' Association.

Printed by S. Zeenath Beevi at The Printing House, No.6, Race Course Road, Khajamalai, Trichy-620 023. Ph : (0431) 2420121, 94435 87233
Email : tanrectatrichy@gmail.com



TANRECTA SPEAKS SEPTEMBER - 2019

# TANRECTA SPEAKS

Voice - XVIII SEPTEMBER - 2019 Speech 3

Published on 5th of Every Month

TANRECTA

# தமிழ் நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

பதிவு எண். 236/2000



பேரா. நரசிங்கம்

**Tamil Nadu Retired College Teachers' Association**

Newspaper Regn. No. TNBIL/2003/12746
Website: www.tanrecta.org
Rs. 4 per copy - Subscription (Annual) Rs. 40

Muthukkalathi Street,
Tiruvallikkeni,
Chennai - 600 005

1

## தலைவர் பக்கம்

அன்புள்ள பேராசிரியர்க்கு, வணக்கம்.

நம் அமைப்பின் 19 வது மாநில மாநாடு தஞ்சையில் செப்டம்பர் மாதம் 28ம் தேதி சனிக்கிழமை நடைபெறுகிறது. மாநாட்டில் பங்குபெற நீங்களும் உங்கள் கிளை பேராசிரியர்களும் தயாராக இருப்பீர்கள் என நம்புகிறேன். மாநாட்டு மலருக்கான விளம்பரங்கள் மற்றும் உங்கள் படைப்புகள் மலரில் இடம்பெற உடனடியாக அனுப்பி மலர்குழுவிற்கு உதவிட கேட்டுக்கொள்கிறேன். கிளைச்செயலர்கள் இதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட வேண்டுகிறேன்.

நம்முடைய செயற்குழு செப்டம்பர் 17ந் தேதி திருச்சியில் கூடுகிறது. செப்டம்பர் மாத கிளை கூட்டத்தில் விவாதித்து செயற்குழுவில் வைக்கப்பட வேண்டிய தீர்மானங்களை உங்கள் செயலர் மூலமாக கொடுத்தனுப்புங்கள். ஏதாவது காரணத்தினால் செயலர் வரமுடியாத சூழ்நிலையில் தலைவரிடமோ அல்லது மற்ற பொறுப்பாளர் மூலமாகவோ கட்டாயம் செயற்குழுவிற்கு கொடுத்தனுப்புங்கள். இந்த தீர்மானங்கள் மாநாட்டு பொதுக்குழுவில் விவாதித்து மாநாட்டு தீர்மானங்களாக முடிவு செய்யப்படும். 35 கிளைகளும் கட்டாயமாக செயற்குழுவில் பங்குபெறவேண்டும்.

AIFRUCTOவின் செயற்குழு செப்டம்பர் மாதம் 1ந்தேதி தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் கூடுகிறது. இந்தியாவின் 15 மாநிலங்களைச் சேர்ந்த 51 பொறுப்பாளர்கள் செயற்குழு கூட்டத்திற்கு வர இசைந்துள்ளனர். இவர்களுடன் தெலுங்கானா பொறுப்பாளர்களும் சேரும்போது AIFRUCTO மிகப்பெரிய அமைப்பாக மாறியிருக்கிறது என்பது தெளிவாகிறது . உயர்கல்வித்துறை செயலர் 10 நாட்களுக்குள் Concordance tableஐ தயாரித்து அனுப்புமாறு UGC க்கு உத்தரவிட்டிரப்பதாக MHRDயில் இருந்து பொருளாளர் பேராசிரியர் சுக்லாவிற்கு தகவல் வந்திருக்கிறது .

நன்றி.

**எனது முகவரி :** 43/3, மஹால் 2வது தெரு, மதுரை – 625001. கைப்பேசி : 84282 54243

தோழமையுடன்,
**து.ந.கோகுல்நாத் பாபு**

### அரங்க. நரசிங்கம் அறக்கட்டளை நிதியுதவி வழங்குதல் அறிவிப்பு

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

அரங்க . நரசிங்கம் அறக்கட்டளையினின்று ஆதரவற்றோர், மனநலங்குன்றியோர், உடல் ஊனமுற்றோர், மற்றும் முதியோர் இல்லங்கட்கு **நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி 28.9.2019 அன்று தஞ்சாவூர் காவேரி திருமண மண்டபத்தில்** நடைபெற உள்ளது. நிதி உதவிபெறவிரும்பும்கிளைகள் உரிய வேண்டுகோள், விபரங்களுடன் கடிதம் அறக்கட்டளை செயலர் பேரா. இ.பி.பெருமாள் முகவரிக்கு 15.9.2019க்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டுகிறோம்.

**இ.பி. பெருமாள்,**
செயலாளர், அரங்க. நரசிங்கம் அறக்கட்டளை.





கல்லூரிகளில் பணிபுரிந்த உதவிப் பேராசிரியர்களுக்கு நிர்ணயம் செய்த ரூ.14,940/ – தொகை நிர்ணயம் செய்ய வேண்டித் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கட்டிட நிதி : இக்கிளையின் உறுப்பினர்கள் Dr.P. கோபால கிருஷ்ணன்(5000), 2. பேரா. S. கருங்கண்ணன் (ரூ.5000) வழங்கினார்கள். AIFRUCTO ஆயுள்நிதி பேராசிரியர்கள் Dr. S. கருணாநிதி, 2. Dr.V.R. கருப்பாயாள், 3. Dr.S.C.பழனிசாமி ஆகியோர் செலுத்தினார்கள். கட்டிட நிதியும், ஆயுட்கால நிதியும் செலுத்திய பேராசிரியர்களுக்கு இக்கிளை நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

இந்த மாதம் 24 உறுப்பினர்கள் பிறந்தநாள் காண்கிறார்கள். அவர்கள் நோயில்லா வாழ்வினையும், நீண்ட ஆயுளையும் பெற இறையருள் வேண்டப்பட்டு கிளையின் செயலர் உறுப்பினர்களின் கரவொலிக்கிடையே வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இவ்வுறுப்பினர்களுள், பேராசியர்கள் 1. S.B. கிருஷ்ணமூர்த்தி, 2. C. திருநாவுக்கரசு, 3. கிளையின் துணைத்தலைவர் C. ரேணுகா, Dr.N. சிவராஜன் மற்றும் Dr.A. கஸ்தூரி, தங்கள் பிறந்த நாள் மகிழ்ச்சியைத் தெரிவித்து வந்திருந்த எல்லா உறுப்பினர்களுக்கும் அடையாறு ஆனந்தபவனின் இனிப்பு, காரம், தேநீர், வழங்கி மகிழ்வித்தனர். இவர்களுடன் சென்ற மாதங்களில் பிறந்தநாள் கண்ட Dr.K. குமாரசாமி மற்றும் பேரா. திருமதி. விஜயா, பேரா. P. மோகன் இவர்களும் சேர்ந்து இனிப்பு, காரம் வழங்கினார்கள். இறுதியாக கிளையின் பொருளாளர் வந்திருந்த உறுப்பினர்களுக்கு இனிப்பு, காரம் வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் இனிதே முடிந்தது. **அடுத்து செப்டம்பர் மாத கூட்டம் 2ஆம் சனிக்கிழமை 14.09.19 அன்று கோவை அரசு கல்லூரி வளாகத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.**

பேரா.**P. சங்கமேசுவரன்,**
இணைச்செயலர், கோவை – நீலகிரி கிளை.

### மாநாட்டு அறிவிப்பு

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் (TANRECTA) 19வது மாநில மாநாடு 28.9.2019 சனிக்கிழமை தஞ்சாவூர், நாஞ்சிக்கோட்டை சாலை, காவேரி விழாக்கூடத்தில் நடைபெறவுள்ளது. விழாவில் மாநாட்டு மலர் வெளியிடப்படவுள்ளது. மலர் சிறப்பாக அமையும் பொருட்டு உறுப்பினர்களின் முகவரிகள், கவிதைகள், கட்டுரைகள், விளம்பரங்களை விரைந்து அனுப்பி மாநாட்டு மலர் செம்மையுற உறுப்பினர்களின் அதிகபட்ச ஒத்துழைப்பு கோரப்படுகிறது. தோழியர்களே, தோழர்களே வாருங்கள். கூடிடுவோம். வரலாறு படைப்போம். தஞ்சைத் தரணி அனைவரையும் இருகரம் கூப்பி வரவேற்கிறது.

**–மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள்.**

## கோவை - நீலகிரி கிளை

இக்கிளையின் ஆகஸ்டு மாதம் 2019, மாதக் கூட்டம் இடைவிடாது பெய்த மழையின் காரணமாக, 10.8.19இல் நடைபெறும் கூட்டம் 17.8.19இல் அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் சுமார் 4.30 மணியளவில் துவங்கியது. கிளையின் தலைவர் முனைவர் M. சக்கரபாணி வருகைபுரிந்த பேராசிரியர்களை வரவேற்று கூட்ட நிகழ்வினை துவக்கி வைத்தார்.

**இரங்கல் செய்தி :**

1. நமது கிளையின் உறுப்பினரும், கோவை மண்டல இணை இயக்குனராக பணியாற்றி ஓய்வுபெற்ற Dr.G. கோபால் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. ருக்மணி அம்மாள் (96வயது) 26.7.2019இல் இறைவனடி சேர்ந்தார்.
2. நமது கிளை உறுப்பினரும், கோவை PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உளவியல் துறைத் தலைவராக பணியாற்றி ஓய்வுபெற்ற Dr.P. மகேந்திரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி ரங்கம்மாள் (97வயது) 31.07.19 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர்களின் மறைவிற்கு இக்கிளை ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியது. அடுத்து தலைவர் அவர்கள் செப்டம்பர் 28-ஆம் நாள் தஞ்சாவூரில் நடைபெறவிருக்கும் 19-ம் ஆண்டு விழாவிற்கு, பெரும்பான்மையான உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்தார். ஆண்டு விழாவில் கலந்து கொள்ளும் அனைத்து உறுப்பினர்களுக்கும், பதிவுக்கட்டணம், போக்குவரத்து செலவு, தங்குமிட வசதி, கிளையே செய்து கொடுக்கும் என தெரிவித்தார். பங்குபெறும் உறுப்பினர்கள் இணைச்செயலர் G. சங்கமேஸ்வரன், 9944859042, 9486772731 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு 25.8.19க்குள் இசைவினைத் தெரிவிக்க வேண்டினார் மற்றும் ஆண்டு மலரில் வெளியிட கட்டுரை, கவிதை இவற்றை தலைவர் முகவரிக்கு அனுப்பும்படி வேண்டுகோள் விடுத்தார். கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக நம்முடைய கிளை அதிக விளம்பரங்களைப் பெற்றுத் தந்து பாராட்டுகளைப் பெற்றது. இந்த ஆண்டும் அவ்வாறே பாராட்டுதலை பெறும் வண்ணம் விளம்பரங்கள் பெற்றுத்தர வேண்டுகோள் விடுத்தார். இம்முயற்சியில் Dr.C. ரேணுகா, இக்கிளையின் துணைத்தலைவர் பெற்றுத்தரும் அதிக விளம்பரங்களுக்கு பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்தார். மாநில துணைத் தலைவர் Dr.M. ராஜகோபால் TANRECTA, ரூ.14,940/- அரசு கலைக் கல்லூரிகளில் பெற்றுத் தந்ததைப் போல, அரசு உதவிபெறும், கல்லூரிகளுக்கும் பெற்றுத்தரும் முயற்சிகளை உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தார். எனவே இருப்பினும் இக்கிளை கீழ்கண்ட தீர்மானத்தை ஏகமானதாக நிறைவேற்றியது.

**தீர்மானம்:** 1980-85ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உதவி பேராசிரியர்களாக பணியில் சேர்ந்தவர்களுக்கும், அரசு





## பொதுச்செயலர் கடிதம்

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

நமது அமைப்பின் 19வது மாநில மாநாட்டிற்கான தயாரிப்புகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. 10.8.2019 அன்று நடைபெற்ற தஞ்சாவூர் கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டத்தில் மாநிலத் தலைவர் பொதுச் செயலர் மற்றும் மாநிலப் பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டிற்கான தயாரிப்புகள் பற்றிய விபரங்கள் கேட்டறிந்து விவாதத்தில் பங்கேற்றனர். பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

சென்ற மாதம் நடைபெற்ற மாநில செயற்குழுவின் முடிவின் அடிப்படையில் மாநிலத் தலைவர், செயலர் மற்றும் பொருளாளர் ஆகியோர் 27.7.2019 அன்று திருச்சி அருண் ஹோட்டலில் சந்தித்து புதிய கல்விக் கொள்கை 2019 வரைவு அறிக்கை பற்றிய ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மீண்டும் 10.8.2019 அன்றும் நடைபெற்றது. நடுவண் அரசு, மனித வள மேம்பாட்டுத்துறைக்கு அனுப்ப வேண்டிய கருத்துக்கள் இறுதி செய்யப்பட்டது. அதனடிப்படையில் 11.8.2019 அன்று மின்னஞ்சலில் நமது அமைப்பின் கருத்துக்கள் அனுப்பப்பட்டது.

அகில இந்திய ஓய்வுபெற்ற பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பினது செயற்குழு 1.9.2019 அன்று அய்தராபாத்தில் நடைபெற உள்ளது. அதனில் இயக்க நடவடிக்கைகள் பற்றியும் எதிர்கால திட்டங்கள் பற்றியும் முடிவுகள் மேற்கொள்ள உள்ளனர். நமது அமைப்பின் சார்பில் மாநிலத் தலைவர் கலந்து கொள்ள உள்ளார். Corcordant Table பற்றிய விபரங்கள் அங்கு தெரியவரும்.

நமது அமைப்பின் 19வது மாநில மாநாட்டிற்கான தயாரிப்புகள் மற்றும் தீர்மானங்கள் போன்றவற்றை ஆராய்ந்து முடிவுகள் மேற்கொள்ள மாநில செயற்குழுக் கூட்டம் அடுத்த மாதம் 17ம்தேதி நடைபெற உள்ளது.

சென்ற ஆண்டு நாம் மேற்கொண்ட இயக்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய ஆய்வும் அடுத்து மேற்கொள்ள திட்டங்கள் குறித்தும் முடிவுகள் மேற்கொள்ள அடுத்த மாதம் 28ம் தேதி 19வது மாநில மாநாடு நடைபெற உள்ளது. நமது அமைப்பின் வலிமை, எழுச்சி ஆகியவற்றை எடுத்துக்காட்ட உள்ள நிகழ்வு. இவ்விதழில் அழைப்பிதழ் இடம் பெற்றுள்ளது உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள மாநாடு அழைக்கிறது. திரண்டு வாரீர் !!.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள

**இ.பி. பெருமாள்,**

பொதுச்செயலாளர்,

**எனது முகவரி :** 3/671 முதல் தெரு, ஜீவா நகர்,
கலெக்டரேட் (அஞ்சல்), தருமபுரி – 636705.
தொலைப்பேசி 04342 – 230397 செல் : 9443334397
E.Mail : perumalep@hotmail.com

## மாநில பொருளாளர் அறிக்கை - செப்டம்பர்- 2019

இனிய பேராசிரியர்களுக்கு, வணக்கம்.

நமது கழக உறுப்பினர்களுக்கு விநாயக சதுர்த்தி வாழ்த்துக்களும், முஸ்லீம் உறுப்பினர்களுக்கு மொஹரம் பண்டிகை வாழ்த்துக்களும், நமது கழகத்தின் கிளைகளிலிருந்து ஆகஸ்ட் 2019ல் பெறப்பட்ட உறுப்பினர் கட்டணம், செய்தி மடல்நிதி, அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதி, கட்டிட நிதி, AIFRUCTO ஆயுள் மற்றும் ஆண்டு சந்தா பற்றிய விபரங்கள்.

**வேலூர்** கிளைப் பொருளரிடமிருந்து 2019-20க்கு ஒரு உறுப்பினர் கட்டணம் ரூ.150/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா ஒருவருக்கு ரூ.25/- என ஆக மொத்தம் ரூ. 175/- பெறப்பட்டுள்ளது.

**பொள்ளாச்சி** கிளைப் பொருளரிடமிருந்து 2019-20க்கு ஒரு புதிய உறுப்பினர் கட்டணம் ரூ.150/-ம், செய்திமடல் நிதியாக ரூ.200/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா ரூ.25/-ம், அறக்கட்டளை நிதியாக ரூ.500/-ம், என ஆகமொத்தம் ரூ.875/- பெறப்பட்டுள்ளது, (Dr.M. Latha).

**தஞ்சாவூர்** கிளைச் செயலரிடமிருந்து 2019-20க்கு 1புதிய உறுப்பினரின் கட்டணம் ரூ.150/-ம், செய்திமடல் நிதியாக ரூ.200/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா ரூ.25/-ம், அறக்கட்டளை நிதியாக ரூ.500/-ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ.500/-ம், என ஆக மொத்தம் ரூ. 1375/- பெறப்பட்டுள்ளது. (Prof.K.Vijayalakshmi).

**விழுப்புரம்** கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு ஒருவர், 2019-20க்கு 6 உறுப்பினர்கள் என மொத்தம் 7 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1050/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா 2018-19க்கு ஒருவர், 2019-20க்கு 6 உறுப்பினர்கள் என மொத்தம் 7 உறுப்பினர்களுக்கு ரூ.175/-ம் என ஆக மொத்தம் ரூ. 1225/- பெறப்பட்டுள்ளது.

**செய்யாறு** கிளைப் பொருளரிடமிருந்து 2019-20க்கு ஒரு உறுப்பினரின் கட்டிடநிதி ரூ.5000/- பெறப்பட்டுள்ளது, (Tmt.CKP.Gnanasoundari).

**விருதுநகர்** கிளைச் செயலரிடமிருந்து 2019-20க்கு 1 புதிய உறுப்பினர் மற்றும் 4 உறுப்பினர்களிடமிருந்து கட்டணம் ரூ.750/-ம், செய்திமடல் நிதியாக ரூ.200/-ம், AIFRUCTO ஆயுள்சந்தாவாக 1 புதிய உறுப்பினருக்கு ரூ.1000/-ம், அறக்கட்டளை நிதியாக ரூ.500/-ம், கழகவளர்ச்சிநிதியாக ரூ.500/-ம், என ஆகமொத்தம் ரூ2950/-பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர் மற்றும் AIFRUCTO ஆயுள் உறுப்பினர், Dr.R. Boominathan).

**ஈரோடு** கிளைப் பொருளரிடமிருந்து 2019-20க்கு 2உறுப்பினர்கள் மற்றும் 10 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1800/-ம், செய்திமடல் நிதியாக 10 புதிய





தலைமையை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. உதாரணமாக, மீள பணியமர்த்தப்பட்ட பேராசிரியர்கள், நீதிமன்ற தீர்ப்பிற்குப் பின்னும், நிலுவையில் உள்ளது. 2005க்குப் பின்பும் 2016க்கு முன்பும் ஓய்வுபெற்றவர்களுக்கு ஊதிய திருத்தம் நிலுவையில் உள்ளது. அதைப் பெற உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

19வது மாநில மாநாட்டில், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. பேரா.அரங்க நரசிங்கம் அறக்கட்டளை நிதியிலிருந்து, நமது கிளையின் பரிந்துரையின் மூலம், வெப்பாக்கம் ஒன்றியத்தில் செயல்பட்டுவரும், மாற்றுத்திறன் மாணவர்களுக்கான பயிற்சி மையத்திற்கு நிதியுதவி பெற்றுத்தர, பேரா. T.G. நாகராசன் அவர்களின் முன்மொழிவை ஏற்று தீர்மானிக்கப்பட்டது.

கிளைப் பொருளாளர் பேரா. L. குப்புசாமி அவர்கள் நிதிநிலை அறிக்கையினை பொதுக் குழுவில் வாசித்தார். கிளை ஏற்றுக் கொண்டது. பேராசிரியர் M. வேலுச்சாமி அவர்கள் நன்றி கூறியதுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

பேரா. **வேணுசிவப்பிரகாசம்,**
செயலர், செய்யாறுக்கிளை.

## திண்டுக்கல் கிளை

திண்டுக்கல் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 17.8.19 அன்று திருமதி லக்ஷ்மி அவர்களின் இல்லத்தில் சிறப்பாக நடந்தது. செயலர் திரு. மும்மாட்சி அவர்கள் கால்வலியினால் சில கூட்டங்கள் வர இயலவில்லை. இப்பொழுது கால் வலி குணமானதால், இம்மாத கூட்டத்திற்கு அனைவரையும் பார்க்க வந்திருந்தார். உறுப்பினர்கள் அவரை மகிழ்ச்சியுடன் வாழ்த்தினர்.

புதிய கல்விக் கொள்கை பற்றி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர். இது பயனுள்ள கருத்து பரிமாற்றமாக இருந்தது.

2006க்கு பிறகு ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு இன்னும் புதிய ஓய்வுதிருத்தம் செயல்படுத்துவதில் உள்ள பிரச்சனைகள் பற்றி திரு. மும்மாட்சி விளக்கினார். நம் சங்கத்திற்கான கட்டிட நிதியை அனைவரும் தருவதாக தீர்மானித்து உறுப்பினர்கள் பொருளாளர் திருமதி மகாலட்சுமியிடம் வழங்கி வருகிறார்கள். விரைவில் சங்கத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அடுத்த மாதம் தஞ்சாவூர் மாநாடு செல்வது பற்றி பேசப்பட்டது. பெரும்பான்மை உறுப்பினர்கள் செல்வதாக கூறினார்கள்.

திருமதி. லக்ஷ்மி அவர்கள் உறுப்பினர்களுக்கு மாலை தேநீர் விருந்து அளித்தார். திருமதி. மனோன்மணி அனைவருக்கும் நன்றி கூறினார். **அடுத்த மாதக் கூட்டம் செப்டம்பர் 10ல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. கூட்டம் இனிதே முடிந்தது.**

முனைவர் **ஆர். மும்மாட்சி,**
செயலர், திண்டுக்கல் கிளை.

**தீர்மானம் :** உறுப்பினர்களின் நலன், கிளையின் பொதுக்குழுக்கூட்டம் நடத்துவதில் உள்ள சிரமங்கள் முதலானவற்றைக் கருத்தில் கொண்டு, வருகிற செப்டம்பர் மாதம் முதல் சேலம் கிளையின் பொதுகுழுக்கூட்டம் பிரதி மாதம் இரண்டாம் செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு சேலம்-7 அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

செயலர், வருகைப்புரிந்த அனைத்து உறுப்பினர்களுக்கும், இந்திய தேசத்தின் 73ஆவது சுதந்திர தின நல்வாழ்த்துக்களையும், இஸ்லாமிய தோழர்களுக்கு பக்ரீத் விழா நல்வாழ்த்துக்களையும் தெரிவித்த நிலையில், இறுதியாக இணைச்செயலர் நன்றிகூற கூட்டம் இனிதே முடிந்தது.

**இரங்கல் செய்தி:** சேலம் கிளையின் உறுப்பினரும், சேலம்-7 அரசு கலைக்கல்லூரியின் மேனாள் பொருளியல் துறை பேராசிரியருமான பேரா. T.V. பாலசந்திரன் அவர்கள் கடந்த 24.08.2019 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அடுத்த கூட்டம் வருகிற 10.9.2019 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு சேலம்-7 அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

பேரா. முனைவர் **பெ. மாது**
செயலர், சேலம் கிளை

## செய்யாறு கிளை

எமது கிளையின் பொதுக்குழு கூட்டம் கிளையின் மூத்த உறுப்பினர் முன்னாள் தலைவர் பேராசிரியர் T.G. சம்பந்தம் அவர்கள் தலைமையில் செய்யாறு, ஓய்வுபெற்ற அலுவலர் சங்க கட்டிடத்தில் 11.8.2019 அன்று மாலை 4.30மணி அளவில் நடைபெற்றது. வந்திருந்த பொதுக்குழு உறுப்பினர்களை வரவேற்று, மாதம் ஒருகுறள் அடிப்படையில் கல்வி எனும் அதிகாரத்தின் கீழ்வரும் குறளான

"யாதெனும் நாடாமலும் உளராமால் என்றொருவன்
சான்துணையும் கல்லாத ஆறு?" எனக்கூறி அதன் பொருளையும் தலைவர் விளக்கினார்.

அடுத்து செயலர், பிறந்தநாள்/மணநாள் காண்போருக்கு வாழ்த்து தெரிவிக்கும் முகத்தான் பெயர்களை வாசிக்க உறுப்பினர் அனைவரையும் வாழ்த்தி பாராட்டினர்.

**பிறந்தநாள் காண்போர்:** 1. பேரா. A. காஜா மொய்தீன், 2. பேரா. முனைவர் R. ராஜேந்திரன், 3. திருமதி அமர ஜெக ஜோதி ஏகாம்பரம்

நம் கிளைக்கு புதிய வரவாக இந்த ஆண்டு ஓய்வுபெற்ற இயற்பியல் பேராசிரியர் முனைவர் G. மணி அவர்கள் நமது கிளையின் உறுப்பினராக சேர விருப்பம் தெரிவித்துள்ளார். அடுத்த கூட்டத்தில் முறைப்படி கலந்து கொள்வதாக தெரிவித்துள்ளார். அவரை வரவேற்போம். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கோரிக்கைகளை உடனடி கவனம் செலுத்தி தீர்த்து வைக்கவேண்டும் என





உறுப்பினர்களுக்கு ரூ.2000/-ம், கட்டிடநிதியாக 2 உறுப்பினர்களிடமிருந்து தலா ரூ.5000/- வீதம் ரூ.10,000/-ம், (Dr.N. Ramanujam, A. Anbalagan) என ஆக மொத்தம் ரூ. 13,800/-பெறப்பட்டுள்ளது.

**புதிய உறுப்பினர்கள் :**

Dr.N.V. Karuppusamy, Dr. N.C. Banumathi, N.M. Nallusamy, Dr; V.V. Raju, Dr.P.M. Gopalasamy, S. Sumathi, S. Jayalakshmi, S. Vasudevi, Dr. Raja Karthikeyan, Dr. T. Senthilnathan.

**பழனி** கிளைப் பொருளரிடமிருந்து 2019-20க்கு 18 மற்றும் 2புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.3000/-ம், செய்திமடல் நிதியாக 2 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.400/-ம், AIFRUCTO ஆயுள்சந்தா 3 உறுப்பினர்களுக்கு ரூ. 3000/-ம், அறக்கட்டளை நிதியாக ரூ.3000/-ம் (Prof.M.Purushothaman) என ஆகமொத்தம் ரூ.9400/- பெறப்பட்டுள்ளது.

**புதிய உறுப்பினர்கள்** Dr.K.Sivagami, Dr.M. Pushpa)

**AIFRUCTO ஆயுள் உறுப்பினர்கள்:** Dr.K. Sivagami, Dr. M. Pushpa, R. Maheshwari

**சிதம்பரம்** கிளை செயலரிடமிருந்து 2019-20க்கு 4மற்றும் 1 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.750/-ம், செய்திமடல் நிதியாக ரூ. 200/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா 4 மற்றும் 1 புதிய உறுப்பினருக்கு ரூ.125/-ம், அறக்கட்டளை நிதியாக 1புதிய உறுப்பினருக்கு ரூ. 500/-ம், கழக வளர்ச்சி நிதியாக 1புதிய உறுப்பினருக்கு ரூ.500/-ம் என ஆகமொத்தம் ரூ.2075/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்: Dr. P.R. Rajkumar).

**சென்னை** கிளைப் பொருளரிடமிருந்து 2019-20க்கு 400 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.60,000/-ம், 8 புதிய உறுப்பினர்களுக்கு செய்திமடல் நிதியாக ரூ. 1600/-ம், (M/s Rukmani Srinivasan, Thilagavathi G. Joseph, Chandra Venkatasubramanian, G. Rajah, Girija Balasundaram, P. Sathiabama, Pathimi Pillai, Saraswathi Govindaraj), **AIFRUCTO ஆயுள் உறுப்பினர் சந்தா** 10 உறுப்பினர்களிடமிருந்து ரூ.10,000/-ம் (M/s. Lalitha Vivekanandan, K.S. Kamala, N. Balakrishnan, M.C. Vasantha, R. Sarangan, Jacintha Fenelon, T. Himayavalli, S. Vaidehi, Manorama Samuel, S. Abdul Kather), **அறக்கட்டளை நிதியாக** 26 உறுப்பினர்களிடமிருந்து தலா ரூ.500/வீதம் ரூ.13,000/-ம், **கழக வளர்ச்சி நிதியாக** 27 உறுப்பினர்களிடமிருந்து தலா ரூ. 500/ வீதம் ரூ.13,500/-ம், **AIFRUCTO ஆண்டு சந்தா** 300 உறுப்பினர்களிடமிருந்து ரூ.7500/-ம், கட்டிட நிதியாக 22 உறுப்பினர்களிடமிருந்து ரூ. 85,000/-ம், கட்டிட நிதி பழைய பாக்கி ரூ. 42,875/-ம் இரண்டாவது மகளிர் மாநாட்டு மாநிலப் பங்களிப்புத் தொகை ரூ.35,000/-ம் என ஆக மொத்தம் ரூ.2,68,475/- பெறப்பட்டுள்ளது. **அறக்கட்டளை மற்றும் கழக வளர்ச்சி நிதி அளித்தோர் :** M/s.V. Somasekaran, V. Nagendiran, K. Vivekanandam, R. Vasudevan, A.K. Kamala,

S. Vaidehi, S. Anandhi, A.K. Chandra, R. Velammal, S. Rajalakshmi, S.P. Nizam Mohamed Iqbal, S. Suresh, Manorama Samuel, M.C. Vasantha, V. Rajappa, A. Singarayar, Subhadra Bhaskaran, V. Suseela, K. Vatsala, S. Abdul kadher).

**அறக்கட்டளை நிதி :** M/s K. Kandasamy, N. Palaniandavar, Anusha srinivasan, N. Narayanan, Rani christhu Dhas, S. Malathi).

**கழக வளர்ச்சி நிதி :** M/s.K. Kandasamy, Swarna sethuraman, P.S. Chandra, V. Asha, K. Ambujam, S. Baskaran, Jahanara Razick).

**கட்டிடநிதி அளித்தோர் :** M/s. K.Vivekanandan - 4000, V. Suseela - 4000, A.K.Kamala - 4000, Lalitha Vivekanandan -3000, Santhalakshmi Vasanthakumar -3000, N. Balakrishnan - 4000, R. Vasudevan - 4000, S. Vaidehi - 4000, S. Anandhi - 4000, A.K. Chandra - 4000, R. Velammal - 4000, S. Narasimhalu - 5000, R. Sarangan - 2000, V. Rajappa - 4000, Manorama Samuel - 4000, M.C. Vasantha - 4000, S. Baskaran - 4000, Subhadra Baskaran - 4000, Jacintha Fenelon - 4000, S. Ramnathan - 4000, T. Himayavalli - 4000, S. Abdhul kather - 4000).

**சென்னை** கிளையிலிருந்து இரண்டாம் தடவையாக 2019-20க்கு 50 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.7500/-ம், 15 புதிய உறுப்பினர்களிடமிருந்து செய்திமடல் நிதியாக ரூ.3000/-ம், (M/s. Elizabeth George, V. Sadhasivam, Vanitha Ambalavanam, P.Bhuvaneswari, K. Sankaran, Loganayaki, A. Dilshath, G. Amudhavalli, V. Vasanthakumari, P. Venkatesan, P. Sadhasivan, K.M.Uma Rajan, A.Jayakumar, B. Subramanian, A. Pappusamy), **கழக வளர்ச்சி நிதியாக** 1 உறுப்பினரிடமிருந்து ரூ.500/-ம் (A.Pappusamy), AIFRUCTO ஆயுள் சந்தாவாக ஒரு உறுப்பினரிடமிருந்து ரூ.1000/-ம் (A.Pappusamy), கட்டிட நிதியாக 7 உறுப்பினர்களிடமிருந்து ரூ.23,000/-ம் என ஆக மொத்தம் ரூ.35,000/- பெறப்பட்டுள்ளது. **கட்டிட நிதி அளித்தோர்:** (M/s.Indira Ranganatham -1000, J.Jothikumar-4000, T.T.Pandian-2000, M.Munuswami-4000, R. Chockalingam-4000, N. Ramamurthy-4000,R. Mathialagan-4000)

**வேலூர்** கிளைப் பொருளரிடமிருந்து 2019-20க்கு 2 மற்றும் 2புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.600/-ம், செய்திமடல் நிதியாக இருவருக்கு ரூ.400/-ம் (Tmt.S.Kamatchi, Tmt.T.R.Susila) AIFRUCTO ஆண்டுசந்தா 2019-20க்கு 4 உறுப்பினர்களுக்கு ரூ.100/- என ஆக மொத்தம் ரூ.1100/- பெறப்பட்டுள்ளது.

**திருச்சி** கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 34 உறுப்பினர்கள், 2019-20க்கு 34 உறுப்பினர்கள் என மொத்தம் 68 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.10,200/-ம் AIFRUCTO ஆயுள்சந்தா 2 உறுப்பினர்களுக்கு ரூ.2000/-என ஆக மொத்தம் ரூ.12,200/- பெறப்பட்டுள்ளது, (Prof.S.மருதன், Dr.S.Syghana Begum).





வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவர்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறது.

**தலைவர் தனது உரையில்**: கடந்த 22.07.2019 ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற புதிய தேசிய கல்விக் கொள்கை வரைவு-2019 தொடர்பான கருத்தரங்க நிகழ்வுகள் தஞ்சையில் நடைபெறவுள்ள 19 மாநில மாநாட்டு செய்திகள், அதன் தொடர்ச்சியாக வெளியிடப்படவுள்ள மாநாட்டு மலர், அதில் இடம்பெறும் வகையில் உறுப்பினர்கள் கட்டுரைகள், மேலும் விளம்பரங்கள் வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

**செயலர் தனது உரையில்** : 22.07.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு நிகழ்வுகள், 7th Pay Revision சாரதா மகளிர் கல்லூரியைச் சார்ந்த 26 உறுப்பினர்கள் பெற்றுள்ளது. சமீபத்தில் நடந்து முடிந்த அஞ்சலகத் தேர்வு தமிழ்மொழியில் நடத்தாது, பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு 10% மத்திய அரசு செய்துள்ள இடஒதுக்கீடு, காஷ்மீர் பிரச்சனைகள் முதலானவற்றை சுட்டிக்காட்டி விளக்கமளித்துப் பேசினார்.

**புதிய உறுப்பினர் அறிமுகம் :** கிளைச்செயலர், சேலம் சாரதா கல்லூரியைச் சார்ந்த மேனாள் கணிதத்துறைப் பேராசிரியை பேரா.B.பொன்னம்மாள் மற்றும் புள்ளியியல் துறைப் பேரா.வாசுகி வேணுகோபால் ஆகியோர் சேலம் கிளையில் தங்களை உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வழங்கிய விண்ணப்பம் குறித்து கூறி அவர்களை பொதுக்குழுவிற்கு அறிமுகம் செய்து வைத்தார். பொதுக்குழு அவர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்ட நிலையில் அனைவரும் புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர். மேலும் 19 மாநில மாநாட்டு மலரில், உறுப்பினர்களின் முகவரி, தொலைபேசி எண்கள் இடம்பெற, ஏற்கனவே 18ஆவது மாநில மாநாட்டு மலரில் உள்ள முகவரியிலோ, தொலைபேசி எண்களிலோ திருத்தம், சேர்த்தல் இருந்தால் எழுத்து மூலமாக 25.8.2019க்குள் கிளைச் செயலருக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

**இணைச்செயலர்** : இணைச்செயலர் பேரா. K.R. ரவிந்திரன் அவர்கள், வருமானவரி படிவம் தாக்கல் செய்வதற்குரிய Form -16 சேலம் மாவட்ட கருவூலத்திலிருந்து பெறப்பட்டுள்ளது பற்றியும், பலருக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது பற்றியும் கூறியதோடு, உறுப்பினர்கள் மாநாட்டு மலருக்கு அதிக விளம்பரம் சேகரித்து தரவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

**பொருளர் உரை :** பொருளர் பேரா. S. இராமச்சந்திரன் அவர்கள் தனது உரையில் TANRECTA Speaks தொடர்பான செய்திகள், நிதி செலுத்தாத உறுப்பினர்களின் விபரம், தஞ்சையில் நடைபெறவுள்ள 19ஆவது மாநில மாநாட்டிற்கு சென்று வர வாகன ஏற்பாடுகள், மாநாட்டிற்கு வருகைப் புரியவுள்ள உறுப்பினர்களின் பெயர் பட்டியல் முதலான செய்திகளைக் கூறினார். பின்னர் உறுப்பினர்களின் கலந்துரையாடலுக்குப் பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தஞ்சையில் நடைபெற உள்ள மாநிலமாநாடு பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

தஞ்சை மாநாட்டுக்கு அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்றும் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் செலவுகளை கிளை முழுமையாக ஏற்றுக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டு மலருக்கு விளம்பரங்கள் பெற்றுத் தருமாறு உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. கிளையின் சார்பாக மாநாட்டை வாழ்த்தி விளம்பரம் கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டு மலருக்கு கதை, கவிதை, கட்டுரைகள் எழுதிக் கொடுக்குமாறு உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. உறுப்பினர்களிடமிருந்து கட்டிட நிதிபெறும் முயற்சி துவங்கி இரண்டு ஆண்டுகள் பூர்த்தி ஆகி விட்டது. இருப்பினும் எதிர்பார்த்த அளவுக்கு பணம் வசூலாகவில்லை.

கட்டிட நிதி செலுத்த காலவரையறை நிர்ணயம் செய்து அந்த வரையரைக்குள் வசூலாகும் பணத்தைக் கொண்டு கட்டிடம் வாங்கிட முடிவெடுக்க வேண்டுமென மாநில பொதுக்குழுவை இக்கிளை கேட்டுக் கொள்கின்றது. இப்பிரச்சனை தொடர்பாக செயற்குழுவில் கருத்து தெரிவிக்க கிளை செயலருக்கு அதிகாரம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

பேரா. அரங்க நரசிங்கம் அறக்கட்டளை நிதியிலிருந்து நிதி உதவி பெற விண்ணப்பிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் பேரா. A.தணிகாசலம் அவர்கள் சிற்றுண்டி வழங்கி சிறப்பித்தார். செயலர் பேரா.சி. கனகசுந்தரம் நன்றி உரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**சி. கனகசுந்தரம்,**
செயலர், திருவாரூர்-நாகை கிளை 9442559672

## சேலம் கிளை

கடந்த 10.08.2019 ஆம் நாள், பொதுக்குழுக்கூட்டம் சேலம்-7, அரசு கலைக்கல்லூரி அறை எண். 49ல் கிளைத்தலைவர் பேரா.முனைவர் கொ.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் வரவேற்புரைக்குப் பின்னர் கிளைச்செயலர் பேரா.முனைவர் பெ.மாது கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

**இரங்கல் தீர்மானம் :** சேலம் கிளையின் உறுப்பினரும், சேலம் சாரதா மகளிர் கல்லூரியின் மேனாள் இயற்பியல் துறைத்தலைவருமான செல்வி. N.K.சுலோச்சனா அவர்கள், சேலம்-7, அரசு கலைக்கல்லூரியின் மேனாள் முதல்வர் பேரா. முனைவர் அ. குமாரராஜா அவர்கள், தஞ்சாவூர் கிளை உறுப்பினர்கள், பேரா.எம்.எஸ். கோவிந்தசாமி மற்றும் தியாகராஜசர்மா, திருச்சி கிளை உறுப்பினர் பேரா.இராமசுப்ரமணியன் ஆகியோர் மறைவுச் செய்தியை அறிந்து, சேலம் கிளை மிகுந்த வேதனையடைவதோடு, அன்னார்களை இழந்து





**கட்டிட நிதி**

| | |
|---|---|
| 7/19 வரை கட்டிட நிதி = | ரூ 29,67,900 |
| 8/19 மாதம் பெறப்பட்டநிதி = | ரூ 1,65,875 |
| ஆகமொத்தம் | ரூ 31,33,775 |

2019-20ஆம் ஆண்டிற்கான சந்தா தொகைகளைப் பெற்று அனுப்புமாறும், புதியதாக சேரும் உறுப்பினர்களிடமிருந்து அறக்கட்டளை நிதி, கழகவளர்ச்சி நிதிகளைப் பெற்று அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களது தொகைகளை அனுப்பவேண்டிய முகவரி: இந்தியன் வங்கி, திருவானைக்கோவில், திருச்சி. SB A/c No: 935236819; IFSC Code: IDIB000S110.

**எனது முகவரி:** 3/175, GRT நகர்,
திருவாரூர் - 610001. செல்: 9443976222
E.mail : indirabalu1@gmail.com

அன்புடன்
பேரா. **M. பாலசுப்பிரமணியன்,**
மாநிலப்பொருளாளர்.

### தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்
### பதிவெண் 236/2000

தலைமைக் கழகம் : முத்துகாளத்தி தெரு, திருவல்லிக்கேணி சென்னை - 600 005.

**மாநில பொதுக்குழு கூட்ட அறிவிப்பு**

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம். நாள் : 25.8.2019

**வருகின்ற 2019 செப்டம்பர் மாதம் 28ம் தேதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தஞ்சாவூர் காவேரி திருமண மண்டபத்தில் மாநில பொதுக்குழுக் கூட்டம்** நடைபெற உள்ளது. மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. தலைமையுரை : மாநிலத் தலைவர் முனைவர் T.N. கோகுல்நாத் பாபு
2. மாநாட்டு அறிக்கை : மாநில பொதுச்செயலாளர்
3. 2018 - 2019ஆம் நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கை : மாநிலப் பொருளாளர்
4. அறிக்கைகளின் மீது கருத்து
5. அறிக்கைகளுக்கு ஒப்புதல்
6. மாநாட்டு தீர்மானங்கள்.

பொதுக்குழு உறுப்பினர்கள் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறோம். மாநிலப் பொறுப்பாளர், கிளைப் பொறுப்பாளர்கள் ஆகியோரும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆவர். ஆகவே அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

வாழ்த்துக்களுடன், தோழமையுள்ள
**இ.பி. பெருமாள்,** பொதுச் செயலாளர்,

**சுற்றறிக்கை -2**

"சங்கங்களால் – நல்ல
சங்கங்களால் – மக்கள்
சாதித்தல்கூடும் பெரும் பெருங்காரியம்" என்பதை அறிவோம்.

'எண்ணித் துணிக கருமம்' என்றார் வள்ளுவப் பெருந்தகை. 'திண்ணிய நெஞ்சத்துடன் எண்ணியது முடிக்க மாநாட்டில் கூட உள்ளோம்'.

**"தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை
கடலிலும் வானிலும் கவினுறு நிலத்தினுலும்"**

என்ற பாவேந்தரின் பாடலுக்கேற்ப மாநாட்டுப் பணியை தொடங்கி உள்ளோம். நெஞ்சுரம் உள்ளவர்களுக்கு நெஞ்சிமுள் எம்மாத்திரம். நமது சமூக அக்கறையை மாநாட்டின் மூலம் வெளிப்படுத்த மேலும் ஒரு வாய்ப்பு நாம் கடந்து வந்த பாதை வெறும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டதல்ல. கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதைதான். இருப்பினும் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறோம். நமது வெற்றியின் ரகசியம், உழைப்பு, அர்ப்பணிப்பு ஒழுங்காகத் திட்டமிடல். எனவே நண்பர்களே! மாநாட்டை சோழ மண்டலத் தலைநகரம் தஞ்சையில் நடத்த திட்டமிட்டுள்ளோம். மாநாட்டின் வெற்றிக்கு உழையுங்கள். உங்களது எண்ணச் சிறகை விரித்து வண்ண மலருக்கு செறிவூட்டுங்கள். மாநாட்டு மலர் உங்களது கவிதை கட்டுரை விளம்பரம் என்ற பூக்களால் அலங்கரிக்கப்படட்டும். விரைந்து செயல்படுங்கள்.

★ 31.08.2019க்குள் கிளை உறுப்பினர்கள் பட்டியலை அனுப்பவும்.
★ 07.09.2019க்குள் கட்டுரைகள், கவிதைகள், விளம்பரங்களை அனுப்பவும். மலர் சிறப்பாக உரிய காலத்தில் வெளிவருவதற்கு உதவவும்.

மாநாட்டு வாழ்த்துக்கள்!

தஞ்சாவூர்.
19.08.2019

தோழமையுள்ள
**வே.இராமசாமி**
19வது மாநில மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்.
"அன்னையப்பா இல்லம்" 10A,இரண்டாம் தெரு,
சுந்தரம் நகர், தஞ்சாவூர்-613004. 9443454195/9384426842.

**அறிவிப்பு**

28.09.2019 அன்று தஞ்சையில் நடைபெறும் பத்தொன்பதாவது மாநில மாநாட்டில் நரசிங்கம் அறக்கட்டளையின் நிதி வழங்கும் நிகழ்வு நடைபெற உள்ளது. அதனில் மாற்றுத்திறனாளிகள், உடல் ஊனமுற்றோர், மனநலங்குன்றியோர் மற்றும் அனாதைகள் இல்லம் ஆகியவற்றிற்கு நிதி வழங்கப்பட உள்ளது.

அதன் பயனைப் பெற விரும்பும் கிளைகள் தாங்கள் பரிந்துரைக்கும் அமைப்பின் கடிதத்துடன் அறக்கட்டளையின் செயலாளர் இ.பி.பெருமாள் முகவரிக்கு 19.09.2019க்குள் கடிதம் கிடைக்குமாறு அறிவிக்கப்படுகிறது. அதே போன்று 80 வயதைக் கடந்தவர் பட்டியலையும் தவறாது அனுப்பவும்.

**பேரா. இ.பி. பெருமாள்**
செயலாளர், நரசிங்கம் அறக்கட்டளை





திருச்சி கிளையின் உறுப்பினரும், பெரியார் ஈ.வெ.ரா கல்லூரியில் விலங்கியல் துறைத்தலைவரும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் திருச்சி S.R.C கல்லூரியின் முன்னாள் தேர்வுக் கட்டுப்பட்டாளருமான பேரா. V. சேது அவர்கள் ஆகஸ்ட் 23-அன்று பெங்களூருவில் இயற்கை எய்தினார் எனும் துயரச் செய்தியை தெரிவித்துக் கொள்கிறோம்.

முனைவர். **து. முரளிஜி**
இணைச் செயலர், திருச்சி கிளை

## திருவாரூர் - நாகை கிளை (ஜூலை மாதம்)

திருவாரூர் – நாகை கிளையின் பொதுக்குழு கூட்டம் 29.7.2019 அன்று கிளைத்தலைவர் பேரா. நாராயணசாமி அவர்கள் இல்லத்தில் அவரது தலைமையில் நடைபெற்றது.

**இரங்கல் தீர்மானம்**

திருவாரூர் - நாகை கிளையின் உறுப்பினரும் ஓய்வுபெற்ற வரலாற்றுத்துறை பேராசிரியருமான திரு. K. கேசவன் அவர்களின் குமாரர். K.சீனிவாசன் அவர்கள் 10.7.2019 அன்று அகால மரணம் அடைந்தார். அன்னாரது மறைவிற்கு திருவாரூர் கிளை தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றது. கிளைத் தலைவர் பேரா. R. நாராயணசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்று இயக்க நடவடிக்கைகளை பற்றி எடுத்துரைத்தார்.

கிளை உறுப்பினரும் மாநில பொருளாளருமான பேரா. எம். பாலசுப்ரமணியன் அவர்கள் திருச்சியில் நடைபெற்ற தேசிய கல்விக் கொள்கை கருத்தரங்கு பற்றியும் அதனை தொடர்ந்து நடைபெற்ற மாநில செயற்குழு கூட்ட நிகழ்வுகளைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

**கட்டிட நிதி :** பேரா. K. கேசவன் ரூ.5000 பேரா. G. இராமநாதன் ரூ.5000 கட்டிட நிதி வழங்கி உள்ளனர். அவர்களுக்கு பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தீர்மானம் :** அரசாணை எண் 14940 மூலம் சம்பள உயர்வு வழங்கப்பட்டு பயன் அடைந்தவர்களுக்கு, ஓய்வூதிய திருத்தம் செய்து உயர்ஓய்வூதியம் வழங்கிட ஆட்சிக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இக்கிளை கேட்டுக் கொள்கின்றது.

பேரா. D.ரெங்கராஜுலு அவர்களின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## திருவாரூர் - நாகை கிளை(ஆகஸ்ட்)

திருவாரூர் – நாகை கிளையின் பொதுக்குழு கூட்டம் 24.08.2019 அன்று மாலை 6.30 மணி அளவில் பேரா. R. நாராயணசாமி அவர்கள் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்று இயக்க செய்திகளை எடுத்துரைத்தார்.

2. Ph.D முடித்த கல்லூரி ஆசிரியர்களுக்கு பேராசிரியர் எனப் பெயர் மாற்றம் மற்றும் ஊதியத்திருத்தமும் தமிழக அரசு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே பேராசிரியர் பதவிக்குத் தகுதியானவர்களுக்கு பெயர் மாற்றம் செய்து ஊதியநிர்ணயம் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிக் கிளை தீர்மானிம் நிறைவேற்றியுள்ளது.
3. ஏற்கனவே Ph.D பட்டம் பெற்று முதல்வராகப் பணியாற்றிய/ பணியாற்றும் முதல்வர்களை மூத்த பேராசிரியர் என்று பெயர் மாற்றம் செய்து அவர்களுக்குரிய ஊதியத் திருத்தத்தைப் பெறுவதற்கு மாநில அமைப்பு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திருச்சிக் கிளை தீர்மானிக்கிறது.

இதற்கு மாநிலச் செயலாளர், புதிய கல்விக் கொள்கை குறித்து TANRECTA ஒரு சிறு நூலைத் தயாரித்து கிளைகளுக்கு வழங்க உள்ளது என்றும் கூறினார். மாநிலச் செயலாளர் பேசுகையில் கழகத்திற்கு கட்டடம் அவசியமானதாக உள்ளது எனவும், 2006 பின்பும் 2016க்கு முன்பும் பணிநிறைவு பெற்ற பேராசிரியருக்கான CONCORDANT TABLE மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான முயற்சிகளையும் புதிய கல்விக் கொள்கைகளின் எதிர்மறையான விளைவுகளையும் உறுப்பினர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

இம்மாதம் பிறந்த நாள் காணும் கிளை உறுப்பினர்களின் பெயர்களை கிளைப் பொருளாளர் பேரா. உசைனி வாசிக்க, உறுப்பினர்கள் தங்கள் கரவொலி மூலம் வாழ்த்துக்களை தெரிவித்தனர். இம்மாத கூட்டத்திற்கு தேநீர் வழங்கிய பேராசிரியர் இலட்சுமிநாராயணன், நவநீதன் ஆகியோருக்கு நன்றி கூறப்பட்டது. கிளைப் பொருளாளர் நன்றி நவில கூட்டம் முடிந்தது.

**அடுத்த கூட்டம் 140.09.2019 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கி.ஆ.பெ. விசுவநாதம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும்.**

முனைவர் S. சைகானா பேகம் மற்றும் பேரா. S. மருதம் ஆகிய இருவரும் வாழ்நாள் உறுப்பினர்களாக சேர்ந்தனர்.

மாநில பொருளாளர் திரு. பாலசுப்ரமணியம் அவர்களுக்கு மொத்தம் ரூ.13,995 அனுப்பபட்டது (ஆண்டு சந்தா 34பேர் × ரூ.150 = ரூ.5100 (2018-2019) 34பேர்× ரூ.150= ரூ.5100 (2019-2020), 2பேர் AIFRUCTO ஆயுள் சந்தா 2×1000= ரூ.2000.

இதுவரை 238 உறுப்பினர்கள் 2018-2019ஆம் ஆண்டிற்கான சந்தாவையும், 84 உறுப்பினர்கள் மட்டும் 2019-2020ஆம் ஆண்டிற்கான சந்தாவையும் செலுத்தியுள்ளனர். எகவே மேற்கொண்ட ஆண்டுகளுக்கான சந்தா செலுத்தாத உறுப்பினர்கள் விரைவில் TANRECTA என்ற பெயரில் காசோலையை பொருளாளர் பேராசிரியர் உசைனி அவர்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவருடைய முகவரி :

பேராசிரியர் H.S.H. உசைனி, கிளைப்பொருளாளர்,
13/4, கிழக்கு கொசத் தெரு, பீம நகர், திருச்சி -620003.





**தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்**
**பதிவெண் 236/2000**
தலைமைக் கழகம் : முத்துகாளத்தி தெரு, திருவல்லிக்கேணி சென்னை - 600 005.
**சுற்றறிக்கை 8/19**

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம். நாள் : 1.9.2019

தமிழ்நாடு ஓய்வபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் பத்தொன்பதாவது மாநில மாநாடு இம்மாதம் 28ம் தேதி தஞ்சாவூரில் நடைபெற உள்ளது. அதனில் நமது அமைப்பின் பலத்தை காட்டவும் எழுச்சியை அரசுக்கு உணர்த்த வேண்டிய தருணம் இது. எனவே திரண்டு வாரீர் இதுவரையில் நடைபெற்ற மாநாடுகளை விட பிரமாண்டமாக நடைபெற திரண்டு வாரீர் வெற்றி பெறச் செய்வீர்!!

இதன் தொடர்பாகவும் கோரிக்கைகள் அமைப்பு அதர்தல் போன்றன பற்றி ஆராயவும் மாநில செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

**மாநில செயற்குழுக் கூட்டம்**

**இடம் : திருச்சி அருண் ஹோட்டல் மினி ஹால்**

**நாள் : 17.9.2019 காலை 10.30 மணி**

தலைமை : மாநிலத்தலைவர் முனைவர் T.N. கோகுல்நாத் பாபு பொருள்.

1. வரவேற்புரை
2. இரங்கல்
3. தலைமையுரை
4. பொதுச்செயலர் மாநாட்டு அறிக்கை
5. பொருளாளர் தணிக்கை செய்யப்பட்ட 2018-19க்கான வரவு - செலவு அறிக்கை
6. TANRECTA Speaks
7. அமைப்பின் பொறுப்பாளர்கள் தேர்தல் - கிளை மற்றும் மாநிலம்
8. மாநாட்டு தயாரிப்புகள்
9. உறுப்பினர்கள் கருத்துக்கள்
10. தீர்மானங்கள்
11. நரசிங்கம் அறக்கட்டளை
12. பிற

ஒவ்வொரு செயற்குழு உறுப்பினரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

வாழ்த்துக்களுடன், தோழமையுள்ள
**இ.பி. பெருமாள்,** பொதுச் செயலாளர்,

விநாயகர் சதுர்த்தி, இஸ்லாமிய புத்தாண்டு (முஹர்ரம்)
வாழ்த்துக்கள்
**- ஆட்சிக்குழு**

TAMILNADU RETIRED COLLEGE TEACHERS' ASSOCIATION (TANRECTA)
(3/671, First Street Jeeva Nagar, Collectorate (po), Dharmapuri - 636 705) Reg No : 238/2000
19[th] STATE CONFERENCE - THANJAVUR - 28 - 09 - 2019
Venue : Cauvery Kalyana Mandapam, Nanjikottai Road, Thanjavur.
Information to Members for their stay at Thanjavur.

| S.No | Lodge/ Hotel Name & Contact Number | Location in Thanjavur | Tariff details in Rs. Excl of Tax. | | | | Approx Distance From The Venue |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Non A/C | | A/C | | |
| | | | Single | Double | Single | Double | |
| 1. | Philomena Inn 04362 - 272188 94875 74318 | Near Vinodhaham Hospital | - | - | 900/- | 1200/- Ext. 400/- | 1 Km |
| 2. | PLA Residency 04362 - 278391, 93 | Near Railway Station | - | - | 1500/- | 1800/- Ext. 400/- | 2 Km |
| 3. | Hotel Yagappa 04362 - 230421, 276552 | Near Railway Station | - | - | 900/- | 1480/- Ext. 400 | 1.5 Km |
| 4. | Hotel Valli 04362 - 231580, 584 | Near Railway Station | 600/- | 750/- Ext. 100/- | - | 990/- Ext.200/- | 1.5 Km |
| 5. | Hotel Ramnath A/C 04362 - 272567, 271149 93626 10901 | Near Old Bus Stand | 850/- | 900/- Ext. 75/- | 999/- | 1050/- Ext. 100/- | 3.0 Km |
| 6. | Hotel Karthik A/C 04362 - 278662,63 94422 78662 | Near Old Bus Stand | 500/- | 800/- Ext. 100 | - | 999/- Ext. 200 | 3.0 Km |
| 7. | Hotel Gnanam 04362 - 278501, 07 94865 58504 | Near Old Bus Stand | - | - | 2490/- | 2800/- Ext. 900 | 3.0 Km |
| 8. | Gowsik Hotel 04362 - 228484 97513 28930 | Near New Bus Stand | - | - | - | 1400/- (2 Bed) 1700/- (4 Bed) Incl. of Tax | 4.0 Km |
| 9. | Hotel Ramnath A/c 04362 -226181,182 | Near New Bus Stand | 900/- | 950/- Ext. 100 | 1250/- | 1460/- Ext. 150/- | 4.0 Km |
| 10. | Hotel Balaji Inn 04362 -227949, 226949 73738 52628, 26 | Near New Bus Stand | 750/- | 1050/- | 1100/- | 1500/- Ext. 250/- | 4.0 Km |
| 11. | Vasantham Residency 04362 227208 94875 59606 | Opp. Serfoji College | 350/- | 800/- (3 Bed) | - | 1200/- | 4.0 Km |
| 12. | Star Residency 04362 - 276334 | Hotel Temple Tower | - | - | 2000/- | 2500/- Ext. 900 | 4.0 Km |

For Contact : P. KRISHNAMURTHI - 99441 61888 - THANJAVUR.





8. 22.07 2019 அன்று திருச்சியில் நடைபெற்ற தேசியக் கல்விக் கொள்கை 2019 கருத்தரங்கிற்கு கிளைத்தலைவர், துணைத்தலைவர்,செயலர் மற்றும் பொருளாளர் ஆகிய நால்வரும் கலந்துக் கொண்டனர். அவர்களது செலவுகளை கிளை ஏற்றுக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

இணை செயலர் பேரா.R.ஜெயராமன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. **அடுத்த மாதக் கூட்டம் 14.09.2019 இரண்டாம் சனிக்கிழமை அன்று பிற்பகல் 11.00 மணிக்கு விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா இராம சாமி நாடார் திருமண அரங்கில் நடைபெறும்.**

பேரா. வி.ஹரிராஜன்
செயலர், விருதுநகர் கிளை, செல் 9244578418

## திருச்சிக் கிளை

திருச்சிக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 10.08.2019 அன்று மாலை 5 மணி அளவில் கி.ஆ.பெ. விசுவநாதம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

கிளைத் துணைத் தலைவர் பேரா. கு. கண்ணன் தலைமை ஏற்றார். இணைச் செயலர் முனைவர். து. முரளிஜி அனைவரையும் வரவேற்றார். 27 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 22.07.2019 அன்று திருச்சி அருண்ஹோட்டலில் மாநில அளவிலான புதியக் கல்வி கொள்கைக் குறித்து நடைபெற்ற கருத்தரங்கில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களையும், 28.09.2019 நாளன்று தஞ்சாவூரில் நடைபெற உள்ள நம்முடைய கழகத்தின் மாநில மாநாடு பற்றிய செய்திகளையும் இணைச் செயலர் எடுத்துக் கூறினார். புதிய கல்வி கொள்கைகளின் காரணமாக எதிர்வரவுள்ள பல்வேறு விளைவுகள், நமது செயல்பாடுகள், மற்றும் 2006 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஓய்வூதிய மாற்றத்திற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளையும் இணைச் செயலர் தொகுத்துக் கூறினார்.

அடுத்ததாக, இந்திய அரசு வங்கியில் ஓய்வூதியர்களுக்கும் மூத்த குடிமக்களுக்கும் அளிக்கப்படும் சலுகைகளையும் இன்சூரன்ஸ் அட்வைசர் திருமதி. B. மேனகா எடுத்துரைத்தார். இக்கூட்டத்திற்கு மாநிலத்தலைவர், மாநிலச் செயலாளர் மற்றும் மாநிலப்பொருளாளர் வந்திருந்து சிறப்பு செய்தனர். பேராசிரியர் என் செல்லையா தம் கருத்துக்களை முன்வைத்து கீழ்காணும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

**தீர்மானங்கள் :**

1. முக்கியமான (மாநாட்டு நிதி நிலை அறிக்கை, அமைப்பு விதித் திருத்தங்கள், கட்டிட நிதி போன்றவைகளை) பொதுக் குழு உறுப்பினர்கள் அடங்கிய பிரத்தியோகமான பொதுக்குழுவில் வைத்து விவாதித்து முடிவெடுக்குமாறு திருச்சிக் கிளை தீர்மானிக்கிறது.

அவர்கள் 15.08.2019 இரவு 9.30 மணியளவில் இயற்கை எய்தினார். கிளை உறுப்பினர்கள் அவர்களது இல்லத்திற்கு சென்று மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். அவரது ஆன்மா சாந்தியடைய கூட்டத்தில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1. இம்மாதம் பிறந்தநாள் காணும் நமது கிளையின் உறுப்பினர்கள் 10 பேரின் பெயர்களை கிளை துணைத் தலைவர் பேரா.S.கருப்பையா அவர்கள் வாசிக்க கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.
2. 22.07.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற தேசிய கல்விக்கொள்கை 2019 கருத்தரங்கில் நடந்த நிகழ்வுகள் பற்றியும் அன்று மாநில செயற்குழுவில் நடந்த நிகழ்வுகள் பற்றியும் கிளைச்செயலர் உறுப்பினர்களுக்கு விளக்கினார்.
3. கிளைப்பொருளாளர் .Dr.K.ராஜசேகரன் அவர்கள் இம்மாதம் கட்டிட நிதி வழங்கிய உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்கள் அளித்த தொகையையும் வாசிக்க கூட்டத்தில் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்கப்பட்டது. தலா ரூ 7000/- கட்டிட நிதி வழங்கிய பேராசியர்கள் சென்ற மாத தொடர்ச்சி (V.H.N.S.N) கல்லூரி விருதுநகர்; 101. Dr.S.பாஸ்கரன் S.F.R. மகளிர் கல்லூரி சிவகாசி: 102 பேரா. அனிசெசில் சந்திரா...தொடரும்.
4. பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதி ரூ. 500/- மற்றும் கழக வளர்ச்சி நிதி ரூ. 500/- வழங்கிய நமது கிளையின் உறுப்பினராக தங்களை இணைத்துக் கொண்ட முனைவர் R.பூமிநாதன் (V.H.N.S.N) கல்லூரி விருதுநகர்) அவர்களை இக்கிளை நன்றி பாராட்டி வரவேற்கிறது.
5. ஆயுள் சந்தா ரூ 1000/- மற்றும் செய்தி மடல் சந்தா ரூ300/- செலுத்தி AIFRUCTO ஆயுள் உறுப்பினராக தங்களை இணைத்துக் கொண்ட கீழ்க்கண்ட உறுப்பினரை இக்கிளை நன்றி பாராட்டி வரவேற்கிறது. சென்ற மாத தொடர்ச்சி... 163 முனைவர் R.பூமிநாதன் ...தொடரும்.
6. அடுத்த மாதம் 28-ஆம் தேதி தஞ்சையில் நடைபெறயிருக்கும் நமது மாநில மாநாட்டிற்கு உறுப்பினர்கள் சென்று வர வேன் வசதி செய்ய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மாநாட்டிற்கு அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வரவேண்டும். வர விருப்பம் உள்ளவர்கள் பொருளாளர் Dr.K.ராஜசேகரன் அவர்களிடம் அலைபேசி மூலமாக தங்களது விருப்பத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்களது அலைபேசி எண்ணையும் கொடுக்கவும். Dr.K.ராஜசேகரனின் அலைபேசி எண் 9952767906.
7. உறுப்பினர்கள் எல்லோருக்கும் ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி , ஓணம் பண்டிகை, நவராத்திரி கொலு பண்டிகை, தேவ மாதா பிறந்தநாள் மற்றும் மொஹரம் பண்டிகை நல்வாழ்த்துக்களை இக்கிளை தெரிவித்துக் கொள்கிறது.





| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | Hotel Annamalai<br>04362-228881 | Very near to NEW BUS STAND | 700/-<br>Extra Bed<br>175/- | 900/-<br>Extra Bed<br>175/- | 999/-<br>Extra Bed<br>225/- | 1350/-<br>Extra Bed<br>225/- | 4.0 K.M |
| 14 | Sri Muthu Lodge<br>04362-228833 | Near New Bus Stand | 450/-<br>Extra Bed<br>150/- | 700/-<br>Extra Bed<br>150/- | 1000/-<br>Extra Bed<br>200/- | 1300/-<br>Extra Bed<br>200/- | 4.0 K.M |
| 15 | Ram Ariyas<br>04362-226528<br>9894713769 | Opposite to New Bus Stand | ------ | 880/-<br>Extra Bed<br>150/- | ------ | 1300/-<br>Extra Bed<br>250/- | 4.0 K.M |
| 16 | ASK Residency<br>04362-228786<br>9994118786 | Near New Bus Stand | 500/-<br>Extra Bed<br>100/- | 800/-<br>Extra Bed<br>100/- | 990/-<br>Extra Bed<br>250/- | 1350/-<br>Extra Bed<br>250/- | 4.0 K.M |
| 17 | RS Residency<br>04362-228200<br>9629295573 | Near New Bus Stand | 400/-<br>Extra Bed<br>100/- | 500/-<br>Extra Bed<br>100/- | 700/-<br>Extra Bed<br>200/- | 900/-<br>Extra Bed<br>200/- | 4.0 K.M |
| 18 | Hotel RAKS<br>04362-227806,07<br>7373733015 | Near New Bus Stand | 1500/-<br>Extra Bed<br>450/- | 1800/-<br>Extra Bed<br>450/- | 1800/-<br>Extra Bed<br>450/- | 2100/-<br>Extra Bed<br>450/- | 4.0 K.M |
| 19 | Hotel VICTORIA<br>04362-278566 | 3.0 K.M from New Bus Stand | ---- | ----- | 1400/-<br>For Double Bed | 1800/-<br>For Triple Bed | 1.0 K.M |
| 20 | Sivamurugan Residency<br>04362-227331<br>8825905068 | Near New Bus Stand | ----- | ----- | Double bed<br>1400/-<br>Extra Bed<br>200/- | Triple bed<br>1750/-<br>Extra Bed<br>200/- | 4.0 K.M |
| 21 | R Ve R Residency<br>04362-227377<br>9488123343 | Near New Bus Stand | 400/-<br>Extra Bed<br>150/- | 800/-<br>Extra Bed<br>150/- | 950/-<br>Extra Bed<br>150/- | 1800/-<br>Extra Bed<br>150/- | 4.0 K.M |
| 22 | N M Lodge<br>04362-226910<br>9159581716 | Near New Bus Stand | 400/-<br>Extra Bed<br>100/- | 600/-<br>Extra Bed<br>100/- | 700/-<br>Extra Bed<br>200/- | 900/-<br>Extra Bed<br>200/- | 4.0 K.M |

# தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

## பதிதொன்பதாவது மாநில மாநாடு - 28.09.2019

காவேரி கல்யாண மண்டபம், நாஞ்சில் கோட்டை சாலை, தஞ்சாவூர்.

**நிகழ்ச்சி நிரல்**

காலை 8.30 மணி : **பேராளர் பதிவு**

8.45 மணி : **இயக்கக் கொடியேற்றல்**

கொடியேற்றுபவர் :

வாழ்த்துரை :

9.00 மணி : **பொதுக்குழு - முதல் அமர்வு**

1. தலைமையுரை
2. பொதுச் செயலாளர் அறிக்கை
3. பொருளாளர் வரவு – செலவு அறிக்கை
4. மாநாட்டு தீர்மானங்கள்

10.00மணி : **மாநாடு தொடக்க விழா**

தலைமை : முனைவர் **டி.என். கோகுல்நாத் பாபு**
மாநிலத் தலைவர் TANRECTA

வரவேற்புரை : முனைவர் **வே. இராமசாமி**
வரவேற்புக்குழு செயலாளர்

தொடக்கவுரை : முனைவர் **என். இராசேந்திரன் M.A., Ph.d.,**
மாண்புமிகு துணைவேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

வாழ்த்துரை :

முனைவர் **பி. பார்த்தசாரதி Ex MLC**
பொதுச் செயலர், **AIFRUCTO**
முனைவர் **பக்கிரிசாமி**
தலைவர், அண்ணாமலை பல்கலைக்கழக ஓய்வூதியர் சங்கம்

**மாநாட்டு மலர் வெளியிடுதல்**

மலர் அறிமுகம் : முனைவர் **மு. இளமுருகன்**
மாநாட்டு மலர் அமைப்பாளர்

மாநாட்டுமலர்வெளியிட்டு சிறப்புரை நீதியரசர் **S. நாகமுத்து**
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி

மலர் பெறுபவர் : முனைவர் **தி. அறிவுடை நம்பி**
மண்டல இணைஇயக்குநர், கல்லூரிக்கல்வி, தஞ்சாவூர்

நன்றியுரை : பேரா. **ஆ. ராமகிருஷ்ணன்**
கிளைப் பொருளாளர் தஞ்சாவூர்





இறைவணக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. கூட்டத்தின் தொடக்கத்தில் கிளையின் மூத்த உறுப்பினர் பேரா.G.கிஸ்டோம் பகவன்தாஸ் அவர்கள் காலமானதற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னாரை நன்கறிந்த பேரா. Dr.M. பத்மநாபப்பிள்ளை அவர்கள் அவர்தம் பெருமைகளை அவைக்கு எடுத்துரைத்தார்.

இவ்வாண்டு பிப்ரவரி மாதம் தொடங்கி, புதிய ஓய்வூதியத்தையும், நிலுவைத்தொகையையும் அனைவரும் பெற்றுக்கொண்டிருக்க கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இன்னும் பலருக்கு அப்பயன்கள் இழுத்தடிக்கப்படுகின்றன. இந்நிலைக்கு முதலில் திருநெல்வேலி J.D. ஆக இருந்த பேரா. பாண்டியம்மாள் காரணமாக இருந்தார். இப்போது கன்னியாகுமரி மாவட்டத்து குழித்துறை கருவூல அதிகாரி காரணமாக உள்ளார். எனவே குழித்துறை கருவூல அதிகாரியின் பிழையான நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி கன்னியாகுமரி தலைமை கருவூல அதிகாரிக்கு ஒரு விண்ணப்பத்தைக் கிளைத் தலைவரும் செயலாளரும் கொடுத்துள்ளோம். இந்த விண்ணப்பத்தின் பயனாக நாகர்கோவில் கருவூலத் தலைமை அதிகாரி அனைத்துக் குறைகளையும் களைந்து விரைவில் சரி செய்து தருவதாக வாக்குறுதி தந்துள்ளார்கள். மேற்சொன்ன இவ்வனைத்துத் தகவல்களும் அன்றைய கூட்டத்தில் தலைவரால் அவைக்கு விளக்கப்பட்டன.

இக்கிளையின் வழக்கப்படி 80 வயதடைந்த பேரா. Dr.M.L. நாரயணன் அவர்களுக்குக் கிளையின் முன்னாள் தலைவர் பேரா. Dr.S.S. ஹெக்டர் சால்வை போர்த்திச் சிறப்பித்தார். அன்னாரை நன்கறிந்த பேரா. Dr.V. கிருஷ்ணன் அவர்கள் பெருமைமிக்க பாராட்டுகளை வழங்கினார்.

தஞ்சாவூரில் நடக்கவுள்ள நம் மாநாடு பற்றி விளக்கிச் சொல்லி, பெரும் எண்ணிக்கையில் நாம் கலந்து கொள்ள வேண்டுகோள் வைத்தார் கிளைச் செயலாளர். வந்திருந்தோருக்கு பேரா. S. திரவியம் நன்றி கூறினார்கள்.

**அடுத்தக் கூட்டம் 10.9.2019 அன்று நடைபெறும்.**

பேரா. **Dr.S. குமாரசுவாமி,**
செயலர், கன்னியாக்குமரிக் கிளை.

### விருதுநகர் கிளை

விருதுநகர் கிளையின் பொதுக்குழு கூட்டம் 17.8.2019 முற்பகல் 11.00 மணியளவில் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V.இராமசாமி நாடார் திருமண அரங்கில் கிளைத்தலைவர் முனைவர் N.இன்பமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் தலைவர் வரவேற்று தலைமையுரையாற்றினார்.

**இரங்கல் தீர்மானம் :**

நமது கிளை உறுப்பினர் பேரா.மனோகர டேனியல்(VVK கல்லூரி, விருதுநகர்,W/Oபேரா.டேனியல் துரைராஜ்,(V.H.N.S.N)கல்லூரி விருதுநகர்),

**எமது செப்டம்பர் மாதக் கூட்டம் வழக்கம்போல் 14.9.2019 அன்று நடைபெறும். தஞ்சை மாநாட்டிற்கு திரள்வீர்.**

பேரா. **எம். கோபாலசாமி,**
செயலர், ஈரோடு கிளை.

### கரூர் கிளை

கரூர் கிளையின் ஆகஸ்ட்டு மாதாந்திரக் கூட்டம் 11.8.19 அன்று கரூர் வாணி செட்டியார் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டம் சுமார் பத்து மணியளவில் துவங்கியது. கூட்டத்திற்கு கிளைத் தலைவர் பேரா. R. பாண்டியராஜ் அவர்கள் தலைமையேற்றார்.

கூட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் பற்றி விவாதிக்கப்பட்டு தீர்மான வடிவில் கொண்டுவரப்பட்டது. அவற்றில்

1. செப்டம்பரில் நடைபெறவிருக்கும் நம் பத்தொன்பதாவது மாநாடு நடைபெறும் நாள், இடம் ஆகியவற்றை உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்து திரளான உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.
2. அனைத்து உறுப்பினர்களும் மாதாந்திரக்கூட்டம் அனைத்திற்கும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென வற்புறுத்தப்பட்டது.
3. ஆகஸ்ட் 31-தான் நம் வருமானவரி படிவத்தை சமர்ப்பிக்கக் கடைசி நாள் என்பதை நினைவுபடுத்தி, அனைத்து உறுப்பினர்களும் தவறாது மேற்கூறிய தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.
4. நிலுவையில் உள்ள தீர்க்கப்படாத பல்வேறு கோரிக்கைகளுக்கு தலைமைக்கழகம் தக்க சீரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென எம் கிளை கேட்டுக் கொள்கிறது.
5. சங்கத்திற்கு செலுத்த வேண்டிய சந்தா நிலுவைத்தொகையை உடனடியாக கிளைப் பொருளாளர் அவர்களிடம் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டது.
6. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உடுமலை மற்றும் குடியாத்தம் கிளைகளுக்காக தலைமைக்கழகம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளுக்கு கரூர்கிளை பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.
7. **அடுத்த கூட்டம் வரும் 8.9.2019 அன்று இதே அரங்கத்தில் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது.**
8. இறுதியில் கிளைப் பொருளாளர் பேரா. R. பழனி அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பேரா. **V. பழனிச்சாமி,**
செயலர், கரூர் கிளை.

### கன்னியாக்குமரி கிளை

கன்னியாக்குமரிக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 13.8.2019 அன்று மாலை 4.30 மணிக்குக் கிளைத் தலைவர் Dr.R. இலட்சுமணசர்மா தலைமையில் நடந்தது. வந்திருந்தோரை பேரா. Dr.M. பத்மநாபபிள்ளை அவர்கள் வரவேற்றார்.





மதியம் 12.00 மணி : பேரா. அரங்க நரசிங்கம் அறக்கட்டளை நிதி வழங்குதல் மற்றும் அகவை 80 கடந்த மூத்த பேராசிரியர்களுக்கு பாராட்டு

தலைமை : பேரா. **எம். பாலசுப்ரமணியன்**
மாநிலப் பொருளாளர், **TANRECTA**

வரவேற்புரை : பேரா. **ம. கமல்ராஜ்**
நிர்வாக குழு உறுப்பினர்,

நிதி வழங்கி வாழ்த்துரை : முனைவர் **T. ஜானகி M.A., Ph.D.,**
முன்னாள் துணைவேந்தர், அன்னைதெரசா பல்கலைக்கழகம்
பெரியார் கிராம வளர்ச்சி திட்ட இயக்குநர்

நன்றியுரை : பேரா. **P. குமார வேலு**
கிளைத் தலைவர், தஞ்சாவூர்.

மதியம் 1.00 மணி : மதிய உணவு இடைவேளை

2.00 மணி : **பொதுக்குழு - இரண்டாம் அமர்வு**

தலைமை : முனைவர் **என். மாரிசாமி**
துணைத் தலைவர், **TANRECTA**

அறிக்கைகட்கு ஒப்புதலும் தீர்மானங்களும்

### நிறைவு விழா

மாலை 3.00 மணி

தலைமை : பேரா. **இ.பி. பெருமாள்**
பொதுச்செயலாளர், **TANRECTA**

வரவேற்புரை : பேரா. **பார்வதி கோபாலன்**
மாநிலத் துணைத் தலைவர், **TANRECTA**

அறிமுகவுரை : பேரா. **எஸ். சந்திரா**
மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர், **TANRECTA**

நிறைவுரை : திரு. **துரைப்பாண்டியன்**
பொதுச் செயலாளர், தென்மண்டல
மத்திய அரசு ஊழியர் சங்கம்

வாழ்த்துரை : முனைவர் **இரா. தாமோதரன்**
பொதுச் செயலாளர், **TNGCTA**
பேரா. **எம். நாகராசன்**
பொதுச் செயலர், **MUTA**
முனைவர் **வி. சுவாமிநாதன்**
மண்டலச் செயலாளர், **AIFRUCTO**
திரு. **வே. ரவி**
துணைத் தலைவர், **AIFUCTO**

தீர்மானங்கள் : பேரா. **S. சிவசண்முகம்**
மாநில இணைச்செயலாளர், **TANRECTA**

நன்றியுரை : முனைவர் **ம. இராஜகோபால்**
மாநில துணைத் தலைவர், **TANRECTA**

*தங்களை அன்புடன் அழைக்கும்* – **தஞ்சாவூர் கிளை**

# கிளைச்செய்திகள்

## பொள்ளாச்சி கிளை

எமது கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 17.8.19 அன்று மாலை 4 மணிக்கு NGM. கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்கள், மற்றும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட NGM கல்லூரி முதல்வர் பொ.மா.பழனிச்சாமி அவர்களையும் வரவேற்று செயலர் முனைவர் மு. இராமச்சந்திரன் அவர்கள் கூட்ட நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்தார். கிளையின் தலைவர் மற்றும் முன்னாள் முதல்வர் P. சுந்தரம் அவர்கள் கிளையின் செயல்பாடுகளையும், ஓராண்டாக செய்த பணிகளையும் விளக்கி கூறினார்கள்.

பொருளாளர் பேராசிரியர் பாலகங்காதரன் அவர்கள் இம்மாதம் பிறந்தநாள் காணும் பேரா.M. கோபால் சாமி, மற்றும் பேரா. M. இராஜாமணி ஆகியோர்க்கு பிறந்தநாள் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

அரசு கலைக்கல்லூரி முதல்வராக பணியாற்றி ஓய்வுபெற்ற பேரா. லதா அவர்களை எமது கிளையின் புதிய உறுப்பினராக அறிமுகப்படுத்திய பின் உறுப்பினர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

பொள்ளாச்சி கிளை துவங்கி ஓராண்டு நிறைவு பெற்றதை வாழ்த்தி பேரா. ஆறுமுகம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அன்னாருக்கு பொள்ளாச்சி கிளையின் சார்பாக நன்றி தெரிவித்தனர்.

**தீர்மானம் :**

1. வரும் செப்டம்பர் 28ம் தேதி பத்தொன்பதாவது மாநில மாநாடு தஞ்சையில் நடைபெற உள்ளது. இம்மாநாடு வெற்றி பெற கிளையின் சார்பாக வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
2. மாநாட்டில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.
3. மாநாட்டில் கலந்து கொள்ள விருப்பமுள்ள உறுப்பினர்கள் செப்டம்பர் மாதம் நடைபெறும் மாதாந்திர கூட்டத்திற்குள் தெரிவிக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாக மாவட்ட பிரதிநிதி பேரா.க. நஞ்சையன் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**அடுத்த மாத செப்டம்பர் கூட்டம் 14ம் தேதி சனிக்கிழமை, மாலை 4 மணிக்கு NGM கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

பேரா. **மு. இராமச்சந்திரன்,** செயலர்,
பொள்ளாச்சி கிளை.

## உடுமலைப்பேட்டை கிளை

10.8.19 அன்று நடைபெறவிருந்த கிளைப் பொதுக்குழுக் கூட்டம் மழையின் காரணமாக, 17.8.19 யன்று சனிக்கிழமைக்கு மாற்றப்பட்டது. காலை 11.00மணிக்கு





பேராசிரியர்களின் பெயர்கள் வாசிக்கப் பெற்று வாழ்த்தும் கூறப்பட்டது. கடந்த 22.7.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற தேசிய கல்வி பற்றிய கருத்தரங்கம் பற்றியும் அதில் சிறப்புரை ஆற்றிய முனைவர் வெங்கடேஷ் ஆத்ரேயா மற்றும் AIFRUCTOவின் பொதுச் செயலாளர் முனைவர் பார்த்தசாரதி ஆகியோரின் கருத்துக்கள் பற்றியும் விளக்கப்பட்டது. நமது அமைப்பு ஏற்பாடு செய்த கருத்தரங்கம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அன்று மதியம் கூடிய செயற்குழு கூட்டத்தின் செயல்பாடுகளையும் விளக்கிக் கூறப்பட்டது. தஞ்சையில் நடைபெறவுள்ள நமது சங்கத்தின் 19வது மாநில மாநாட்டிற்கு அதிக எண்ணிக்கையில் பேராசிரியர்கள் கலந்து கொள்ளவும் விளம்பரங்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கவும் அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். நமது கட்டிட நிதி ஒரளவு நல்ல நிலையினை எட்டியுள்ளது. இதனை நாம் மேம்படுத்தி சென்னையில் நமது சங்கத்திற்கான இருப்பிடத்தை நாம் பெற்றாக வேண்டும். அடுத்த நிகழ்வாக இன்றைய கூட்டத்தில் கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு கலைக்கல்லூரி மற்றும் வேளாளர் மகளிர் கல்லூரி சார்ந்த பேராசிரியர்கள் 10பேர் நமது அமைப்பில் இணைந்தார்கள். இவர்களை பாராட்டி வரவேற்கின்றோம். முனைவர் ராஜா கார்த்திகேயன் அவர்களும் தங்களது இணைப்பை பற்றி மகிழ்வுடன் பேசினார்கள். இவர்கள் அனைவருக்கும் நன்றி.

இன்றைய கூட்டத்தில் முனைவர் S. ராமசாமி அவர்கள் கோவை RJD அலுவலக செயல்பாடுகள் பற்றி வேதனையுடன் தனது கருத்தினை வைத்தார். ஈரோடு கலைக்கல்லூரி பேராசிரியர்கள் முனைவர் அண்ணாத்துரை மற்றும் முனைவர் அருணாச்சலம் அவர்களின் துணைவியார் சார்ந்த பிரச்சினைகளை அவர் விளக்கினார். இந்தப் பிரச்சினைகளை சரிசெய்யும் பணியில் நமது அமைப்பு செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கிளையின் பொருளாளர் பேரா. B. பிரபாகரன் அவர்கள் தனது உரையில் RJD சம்பந்தமாக மனுக்கள் ஒட்டுமொத்தமாக செல்வதற்கும் தனியாக மனு அனுப்பப்படுவதற்குமான வேறுபாடுகளை விளக்கியவர். ஈரோடு கலைக் கல்லூரி பேராசிரியர்கள் சார்ந்த பிரச்சினைகளையும் எடுத்துரைத்தார். தஞ்சை மாநாட்டிற்கு வருகின்ற பேராசிரியர்களுக்கு Registration Feeஐ நமது சங்கம் ஏற்கும். தஞ்சை மாநாட்டிற்கு விளம்பரங்கள் தரவும் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கும் படியும் அதிக எண்ணிக்கையில் பங்கேற்கவும் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இன்றைய மதிய உணவினை குமாரபாளையம் J.K.K கல்லூரி சார்ந்த முனைவர் C. கண்ணாம்பாள் தனது பேரக்குழந்தை வரவை முன்னிட்டு முனைவர் M.K. நாகப்பன் தனது 50வது மணநாளுக்காகவும் முனைவர் M.R. சண்முகம் தனது பிறந்தநாளை முன்னிட்டும் இனிப்புடன் மதிய செலவினை ஏற்றுக் கொண்டனர். இவர்களுக்கு நன்றி.

**செப்டம்பர் மாதக் கிளைக் கூட்டம் வழக்கம்போல் வேலூர் ஆசிரியர் இல்லத்தில் 11.09.2019 அன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.**

முனைவர் **மு. குருசாமி,**
செயலர், வேலூர் கிளை.

## இராமநாதபுரம் கிளை

இராமநாதபுரம் கிளையின் மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 15.08.2019 வியாழக்கிழமை மாலை 6.30 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் கிளைத் தலைவர் பேரா. முனைவர் S.A. சிந்தா நைனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வருகை புரிந்த உறுப்பினர்களை வரவேற்று பேசிய கூட்டத்தலைவர் கூட்டத்திற்கான கருதுபொருள் பற்றிய விளக்கத்தையும் விளக்கினார்கள்.

28.09.2019 அன்று தஞ்சாவூரில் நடைபெற உள்ள TANRECTA வின் 19-வது மாநில மாநாட்டில் கிளை உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்வதின் அவசியத்தை கிளைச் செயலாளர் எடுத்து கூறினார்கள். மாநாடு தொடர்பாக கிளையின் சார்பில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்களைப் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

கிளை உறுப்பினர் பேரா. முனைவர் R. காசிநாத துரை அவர்கள் "Antimicrobial chemotherapy" என்ற தலைப்பில் மிக பயனுள்ள உரையை சுவைப்பட வழங்கினார்கள். உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு உரிய விளக்கத்தினை அளித்தார்கள்.

வருகை புரிந்த உறுப்பினர்களுக்கு இரவு உணவினை பேரா.முனைவர் S.சுரேஷ் தாஸ் அவர்கள் வழங்கி நண்பர்களின் நன்றியை பெற்றுக் கொண்டார்கள்.

**கிளையின் அடுத்த மாதாந்திர பொதுக்குழு கூட்டத்தினை 14.09.2019 சனிக்கிழமை அன்று இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் மாலை 6.00 மணி அளவில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.**

கிளையின் துணைத்தலைவர் பேரா. எஸ். சேசுராஜ் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

பேரா. **க. ஜீவானந்தம்,**
செயலர், இராமநாதபுரம் கிளை.

## ஈரோடு கிளை

ஈரோடு கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டம் கடந்த 10.8.2019 அன்று காலை 10.30 மணிக்கு ஈரோடு ஒற்றுமை அரங்கில் கிளைத்தலைவர் முனைவர் K.R. பரமசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு 36 பேராசிரியர்கள் வந்திருந்தனர். கூட்டத்தினரை கிளைச் செயலர் பேரா. M. கோபால சாமி வரவேற்றார். முதல் நிகழ்வாக இம்மாதம் பிறந்தநாள் காண்கின்ற





அரசு கல்லூரி வளாகத்தில், கிளைத்தலைவர் பேரா. M.R. வேலுசாமி தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றார்.

புதிய தேசியக் கல்விக் கொள்கையில் காணப்படும் கல்வி நலனுக்கெதிரான போக்குகள் பற்றி உறுப்பினர்களுக்கு விவரித்தார். தஞ்சையில் நடைபெற உள்ள 19வது மாநில மாநாட்டில் பெரும்பாலான உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கிளைச்செயலர் பேரா. M. வெள்ளிங்கிரி, (22.7.19) யன்று திருச்சி, அருண் ஹோட்டலில் நடைபெற்ற தேசிய கல்விகொள்கை கருத்தரங்கத்தில் கலந்து கொண்டதையும், மேலும் பேரா. முனைவர் வெங்கடேஷ் ஆத்ரேயா, பேரா. முனைவர் B. பார்த்தசாரதி ஆகியோரது அறிக்கைகளை உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினார். மேலும் கிளை சங்கப் பணிகள் குறித்தும், உறுப்பினர்களது ஓய்வூதியத்தில் மாதாமாதம் கருவூலகத்தில் IT- க்காக பிடித்தம் செய்வதைப் பற்றி விவாதிக்கப்பட்டது.

பேரா. முனைவர் சு. சுப்ரமணியம், மேனாள் சிண்டிகேட் உறுப்பினர், பாரதியார் பல்கலைக்கழகம் சங்கத்தின் வளர்ச்சிப்பற்றி விவரித்தார்

பேரா. K. சிந்தாமணி அவர்கள் மூத்தகுடிமக்கள் வாழ்க்கைமுறைப் பற்றியும் உறுப்பினர்கள் எவ்வாறு மகிழ்வுடன் வாழ வேண்டும் என்பதைப் பற்றியும் விவரித்தார்.

பேரா. முனைவர். P. தங்கராசன் அவர்கள் நமது இயக்கம் பெற்றுத்தந்த சாதனைகளைப் பற்றி எடுத்து கூறினார்.

பேரா. N. அனந்தபரமேசுவரி அவர்கள், பேரக்குழந்தை பிறந்தமைக்கு வாழ்த்து தெரிவித்ததற்கு நன்றி கூறி, (இனிப்பு, காரம் மற்றும் தேநீர்) விருந்து உறுப்பினர்களுக்கு அளித்தார்.

**பிறந்தநாள் வாழ்த்து:**

ஆகஸ்ட் மாதம் பிறந்த நாள் காணும் பேராசிரியர்கள் G. ஜெயக்குமார், S. ராஜாமணி, முனைவர் J. மஞ்சுளா, திருமதி. P. சர்னா பழனிச்சாமி, துணைச்செயலர் பேரா. S. லட்சுமியம்மாள் ஆகியோருக்கு கிளையின் சார்பாக பிறந்தநாள் வாழ்த்துரைத்துப் பாராட்டினர்.

**மாநாட்டு தீர்மானங்கள் :**

1. பணி நிறைவுபெற்ற கல்லூரி பேராசிரியர்கட்கு வருமானவரி பிடித்தம் செய்யக்கூடாது என மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.
2. கல்வியை அரசியலமைப்பின் பொதுப்பட்டியலிருந்து மாநிலப்பட்டியலுக்கு கொண்டுவர வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இணைச் செயலர் பேரா. S. லட்சுமியம்மாள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது. **அடுத்த கூட்டம் (14.9.19) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு அரசு கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

பேரா. **எம். வெள்ளிங்கிரி,**
செயலர், உடுமலைப்பேட்டை கிளை.

## KUMBAKONAM UNIT

The Kumbakonam Unit of Tanrecta met in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening on 10th August, 2019, President Prof. C.Rajasekaran presided. We congratulate our members who celebrate their birthday in the month of August. Prof. Dr. A. SIVASANKARAN, Prof. A. GOVINDASAMY, Prof. (Mrs.) GOMATHI BASKARAN, Prof. Dr.G. GOVINDARAJAN, and Prof. V. SIVAKUMARAN. We wish them a happy birth day. We wish all the members a happy Independence Day. தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர்க்கழகத்தின் மாநில அளவிலான தேசிய கல்விக்கொள்கை 2019 வரைவு அறிக்கை பற்றிய கருத்தரங்கம் 22.07.2019 அன்று திருச்சி அருண் ஹோட்டல் மேக்ஸி ஹாலில் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. நம் கிளையின் தலைவர் பேராசிரியர் சி.இராஜசேகரன், துணைத்தலைவர் முனைவர் பேராசிரியர் சி.மணி, பேராசிரியர் சி.ஜெ.பிலோமென்ராஜ் மூவரும் அக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர் அவ்வமையம் நம்கிளையின் தலைவர் பேராசிரியர் சி.இராஜசேகரன் புதிய கல்விக் கொள்கையின் மீதான கருத்துக்களை இரண்டு பக்க அளவில் தான் தயாரித்து வைத்திருந்த கட்டுரையைப்படித்தார். அதில் அவர் முக்கியமான கருத்துக்களைக் கூறி தேசிய கல்விக்கொள்கை 2019 வரைவு அறிக்கையின் குறைபாடுகளைக் கூறினார். During the meeting Prof.Dr.C.Mani, Vice President of the unit elaborated the discussions that went on in the seminar on National Education Policy 2019. Prof. M.Ramalingam member, is yet to get his Health ID Card for Cashless Treatment, issued by the Government of Tamilnadu under New Health Insurance Scheme. Many members sail in the same boat. Prof. C.Rajasekaran suggested that members may use the application copy acknowledged by STO Kumbakonam, instead of NHIS card for the purpose. The centre unit may kindly bring it to the notice of the Tamilnadu Government to redress the anguish of our members.. We request the centre unit that "**TANRECTA**" உறுப்பினர் கட்டணம் செலுத்திய விபரம் (மார்ச்31, 2019 முடிய) may kindly be published as it was published in April, 2017 issue We wish a happy Bakrid to the members. We thank the centre unit for having sent 5 copies of **MEDICAL AID** booklet containing details of medical aid to pensioners. You all know that 19th State Level conference of TANRECTA is to be held on 28th September, 2019 in Thanjavur, at Nangikkottai road, Kavery Thirumana Arangu,Thanjavur. We request all our members to attend the conference to make it a success. We request our unit members to use their influence to get more advertisements to be published in the state conference souvenir. Kindly





TANRECTA-வின் 19–ஆவது மாநில மாநாடு வரும் செப்டம்பர் திங்கள் 28ஆம் நாள் தஞ்சாவூரில் நடைபெறும் என்றும், மாநாட்டு மலருக்கு கட்டுரைகள், கவிதைகள் மற்றும் விளம்பரங்கள் கொடுத்தால் கிளையின் சார்பில் அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறினார். சிற்றுண்டி மற்றும் தேநீருக்குப்பின் கிளையின் பொருளாளர் பேரா. K. வேலுசாமி நன்றி கூறினார். இத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

பேரா. **மா. அற்புதமணி,**
செயலர், கிருஷ்ணகிரி கிளை

## வேலூர் கிளை

வேலூர் கிளையின் ஆகஸ்டு மாதக் கிளைக்கூட்டம் 13.08.2019, மாலை 5.00 மணிக்குக் கிளைத் தலைவர் பேரா. ஜான் ஞானக்கண் தலைமையில் நடந்தது. கிளைச் செயலர் அனைவரையும் வரவேற்றார். முப்பது உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். முதல் நிகழ்ச்சியாக ஆகஸ்டு மாதம் பிறந்தநாள் காணும் பேரா. S. கோட்டீஸ்வரன், பேரா. N.M. தாஹா, பேரா. A. தங்கமணி, மற்றும் பேரா. Dr.A. ரூபஸ் மாணிக்க தாஸ் ஆகிய நால்வருக்கும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

22.07.2019 அன்று முற்பகலில் திருச்சியில் நடைபெற்ற தேசியக் கல்விக்கொள்கைக் கருத்தரங்கம், மற்றும் பிற்பகலில் நடைபெற்ற மாநிலச் செயற்குழு நிகழ்வுகளில் கலந்துகொண்ட கிளைச்செயலர் அனைத்தையும் விளக்கியுரைத்தார். 28.9.2019 சனிக்கிழமை அன்று தஞ்சாவூரில் நடைபெறவுள்ள மாநாட்டு ஏற்பாடுகள் பற்றி, தஞ்சைக் கிளைச்செயலர் விளக்கியுரைத்தார். மாநாட்டு மலரில் இடம்பெற, உறுப்பினர்கள் தங்கள் கட்டுரைகள் கவிதைகளான படைப்புகளை அனுப்பிடவும் கேட்டுக் கொண்டுள்ளார். எனவே கிளை உறுப்பினர்கள் தங்கள் படைப்புகளை விரைந்து கிளைச் செயலருக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் மாநாட்டு மலரில் இடம்பெறவிருக்கும் தங்கள் முகவரிகளில் மாற்றம் இருப்பின் அதனையும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன். எண்பது வயதை அடைந்த மூத்த உறுப்பினர் பட்டியலில் வேலூர் கிளையில் பேரா. Dr.K. மோகன் இவ்வாண்டு இடம் பெறுகிறார். மேலும் அவருக்கு 06.07.2019 அன்று பிலிப்பைன்ஸ் நாட்டு மணிலாவில் இங்கிலாந்து சமூகசேவை நிறுவனத்தாரால் தெரிவு செய்யப்பட்டு **'சர்' பட்டம்** வழங்கப்பட்டுள்ளது. அவருக்குக் கிளை வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறது. அவர் தொண்டு சிறக்க நல்வாழ்த்துக்கள். வெளிநாடு சென்று வந்த பேரா. M. இராதாகிருஷ்ணன் அதனைக் கொண்டாடும் வகையில் கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் சிற்றுண்டி வழங்கிச் சிறப்புச் செய்தார்கள். பொருளர் பேரா. Dr.R. கணேசன் நன்றிக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

செலுத்தாத உறுப்பினர்கள் விரைந்து உறுப்பினர் கட்டணம் ரூ.400/- ஐ செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஜூலை- 2019 மாதம் வரை 60 உறுப்பினர்களுக்கு 2019 - 2020-ஆம் ஆண்டிற்குரிய சந்தாத்தொகை தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

இம்மாதம் (செப்டம்பர் 2019) பிறந்தநாள் கொண்டாடும் பேராசிரியர்கள் அப்துல் காதர், P. ஜெயராமன், A.P. சாந்த குமாரன் ஆகியோர் நோயற்ற வாழ்வுடனும் புகழுடனும் மன அமைதியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்சங்கம் அவர்களை வாழ்த்துகின்றது. நம் கிளையின் புதிய உறுப்பினர்களாக பேராசிரியர் S. திருமலை வேலாயுதம் (Dept. of Economics/ V.O.C. College, Tuticorin), Dr.A. கலிஸ்தஸ் (Dept. of English, St. Xavier's College Palayamkottai) ஆகிய இருவரும் இணைந்துள்ளார்கள். அவ்விரு பேராசிரியர்களையும் கரஒலி எழுப்பி உறுப்பினர்கள் வரவேற்றனர்.

பேரா. T.S. முருகன் வழங்கிய இன்சுவை விருந்திற்குப் பின் பேரா. A. பாண்டியன் நன்றி கூற கூட்டம் இனிது நிறைவுற்றது. **செப்டம்பர் 2019-ஆம் மாதக்கூட்டம் 12.9.2019 அன்று (இரண்டாம் வியாழன்) மாலை 6 மணிக்கு வழக்கம்போல் ஜங்ஷன் MDT இந்துக் கல்லூரி மேனிலைப்பள்ளியில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

நமது கிளையின் கூட்டம் நடத்த அனுமதி வழங்கிய MDT இந்துக் கல்லூரி மேனிலைப்பள்ளி நிர்வாகத்தினருக்கு இக்கிளை தன் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

பேரா. **தி. பார்வதி நாதன்,**
செயலர், திருநெல்வேலிக் கிளை.

## கிருஷ்ணகிரி கிளை

எங்கள் கிளையின் இந்த மாதக் கூட்டம் 10.08.2019 அன்று மாலை 5 மணியளவில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஆரியபவன் ஹோட்டலில் நடைபெற்றது. கிளையின் பொருளாளர் பேரா. K. வேலுசாமி அவர்கள் தலைமை தாங்கினார். கிளையின் செயலாளர் அனைவரையும் வரவேற்றார்.

இந்தாண்டு மே மாத இறுதியில் ஓய்வுபெற்ற தமிழ்த்துறை தலைவர் பேரா. முனைவர் D. கோவிந்தராஜூலு (அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி) எம் கிளையின் புதிய உறுப்பினராகச் சேர்ந்தார். அவரை கிளையின் சார்பாக செயலாளர் வரவேற்றார். கூட்டத் தலைவரும் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் கைகுலுக்கி வரவேற்றனர். பின்னர் கிளைச் செயலாளர், மாநிலப் பொதுச் செயலாளரின் சுற்றறிக்கையையும், 19-ஆவது மாநில மாநாடு ஒருங்கிணைப்பாளர்கள் அனுப்பிய மாநாட்டு சுற்றறிக்கை எண்-1 யையும் உறுப்பினர்களுக்கு வழங்கி அதிலுள்ள செய்திகளை எடுத்துரைத்தார்.





get the details of charges for advertisements in the state conference souvenir, from the secretary of the unit.

Prof. P.Marimuthu, Joint Secretary of the unit delivered vote of thanks. **Next September, 2019, monthly meeting will be held on 14th September, 2019, the second Saturday,in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening.**

Dr. **D. Sukumar,**
Secretary, Kumbakonam Unit

## CHENNAI UNIT

65 members were present. Dr. Swaminathan presided. The House Condoled the demise of Prof. M.L. Munusamy, a member of our unit.

The president gave details about the tanrecta Seminar at Trichy on the draft policy on education, released by the government of India. The Seminar at Trichy had two main speakers, one Dr. Parthasarathy, general secretary, AIFRUCTO and another Dr. Atreya, an eminent educationist. Dr. Swaminathan touched various important decisions of the government of India on NEET, Next, Changes in the Right to information Act, Triple Talak bill, the changes in Motor vehicle Act and the Kashmir issue.

The Secretary in his report stressed on the Kashmir issue, which is a vital and sensitive issue. He said that the Kashimir issue had to be analysed at various angles, the legal, moral, utilitarian, geographical and political angles. Even though there are two sides for all these angles except the morality of the issue, the most important point is that the people of Kashmir feel terribly let down by the government of India, on account of the far reaching changes effected hastily without consulting the people of the state of J&K.

The Secretary pointed out that the concordance table for pension revision was yet to be issued by the government of India, MHRD. This alone will pave the way for a just pension Revision which will take into consideration the number of years of service in the posts of Associate professors and professors put in by a pensioner prior to retirement. Only the concordance table will ensure the implementation of the minimum of the professors' scale for teachers who retired with a certain number of years of service (16+3+3 = 22).

The 19th state conference of tanrecta at Thanjavur is another milestone which will be soon crossed by TANRECTA. Needless to say that as many as possible should attend from our Chennai unit. Attending conferences is a very important way of strengthening Tanrecta. Advertisements and articles must be sent by our members for the Thanjavur conference. All members of Tanrecta who are completing 80 years of age during this calendar year will be felicitated by the state tanrecta. Rooms are arranged for our members stay in Thanjavur on the day of the conference.

Audited accounts up to 31.3.2019 were presented to the house and approved. The unit thanks Dr. G.P. Raman and Dr. Rajagopalan, our internal auditors, for their excellent work. The house was informed about the NEC of AIFRUCTO on Sept1 at Hyderabad. Also AIFUCTO is likely to hold its statutory conference at Lucknow or Cuttack this year.

The pension pay officer, Chennai deserves our thanks for clearing all the pension revision proposals in PPO office. Only a few cases are pending including those of retired Joint Directors K. Karuppan and S. KarpagaVinayagam. A few issues are pending in the district / sub Treasury offices like those of Mrs. Sugirtha and Mr. Nandagopalan. The issue of Prof. Dharmaraj is still pending. He has not been given revised pension at 2.57 rate as well as at the minimum of Associate Professors scale since he went to court obtaining a stay to stop the arbitrary recovery of the treasury from his pension towards an alleged excess payment to him. The case of B C Moses is also pending like that of Prof Dharmaraj.

The unit thanks the following donors for our unit / conference / tea expenses:

1. N. Vanajakshi (20000), 2. N. Swaminathan (20000), 3. Kanthi Shenbagaraman (6500), 4. K. Balasundaram (5000), 5. Parvathi Gopal (5000), 6. Subhadra Baskaran (5000),7. T. Sitalakshmi (500), 8. E.L. Venkatasami (5000), 9. Kanagamani Balasubramanian (2500), 10. T. Renganathan (2000), 11. V. Swaminathan (2000), 12. M. Chandrasekaran (2000), 13. R. Lawrence (2000), 14. Albert (2000), 15. Usha Ragotham (2000), 16. Anantha vijayakumari (1500), 17. Yasodha Shanmugasundaram (1000), 18. G. Bharathi (1000), 19. S.S. Kumar (1000), 20. Dr. B. Parthasarathy, General secretary, AIFRUCTO (1000)

Also Prof. Parthsarathy and Prof. Hemalatha of our unit, hosted tea for our unit meeting in August, 2019.





ஆகியோர் கலந்து கொண்டு கருத்து பரிமாற்றங்கள் செய்தனர் என்பதனை இக்கிளை பதிவு செய்கிறது.

6. மேற்கூறிய கருத்தரங்கில் கலந்து கொண்ட பேரா.முனைவர் J.P. ஜெயக்குமார் மற்றும் பேரா.முனைவர் பிராங்க் ரெத்தினகுமார் ஆகிய இருவரும் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களை உறுப்பினர்களுக்கு விளக்கமாகவும் அதன் குறை மற்றும் நிறைகளை எளிய முறையில் வெகு அழகாக எடுத்து கூறினார்கள். இவ்விருவரையும் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
7. இனிவரும் காலங்களில் பிறந்தநாள் மற்றும் திருமணநாள் ஆகியவற்றை எதிர்கொள்கிற உறுப்பினர்களுக்கு நம் சங்கத்தின் சார்பாக வாழ்த்து அட்டைகளை அச்சிட்டு உரிய காலங்களில் அந்தந்த உறுப்பினர்களுக்கு அனுப்புவது என்று தீர்மானிக்கப்பட்டது.
8. 10.08.2019 அன்று நடந்த பொதுக்குழு கூட்டத்தில், 2019 ஆகஸ்ட் முதல் சந்தா பிரதி மாதம் ஒன்றுக்கு ரூ.100 அல்லது ஒரு வருடத்திற்கு சந்தவாக ரூ.1200 ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்த வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. ஆகவே உறுப்பினர்கள் தங்களின் சந்தா தொகையை பகுதியாகவோ, முழுமையாகவோ செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.
9. கிளையின் பொருளாளர் பேரா. முனைவர் N. கண்ணப்பா நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

பேரா. **எஸ். சுகுமார்,**
செயலர், பொறையார் கிளை.

## திருநெல்வேலி கிளை

இக்கிளையின் மாதாந்திரக் கூட்டம் 08.08.2019 அன்று மாலை 6 மணிக்கு பேரா. M. கதிர்வேல் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. வருகைபுரிந்த உறுப்பினர்களை பேரா. P. ஜெகந்நாதன் வரவேற்றார்.

இக்கிளையின் உறுப்பினர் பேரா. S.A. தியாகராஜன் அவர்கள் (Dept. of English, St. Xavie's College, Palayamkottai) 20.7.2019 அன்று தம் 72-ஆம் வயதில் காலமானார்கள் என்ற துயரச் செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய 2 நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

பொதுச் செயலரின் சுற்றறிக்கை எண் 7/2019 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு, 19-வது தஞ்சை மாநில மாநாடு பற்றியும் கூறப்பட்டது. உறுப்பினர்கள் அதிக அளவில் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுகோளும் விடுக்கப்பட்டது. மாநாட்டில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் போக்குவரத்து செலவினங்களை கிளை ஏற்றுக்கொள்ளும். இதுவரை உறுப்பினர் கட்டணம்

2. ஓய்வுபெற்ற பேராசிரியர் Dr.T. எட்மண்ட் அவர்கள் கிளையின் புதிய உறுப்பினராகவும், காலம்சென்ற பேரா.கிளமண்ட் A. ஈஸ்டர்ராஜ் அவர்களின் துணைவியார் திருமதி. வினோலியா தாமஸ் குடும்ப ஓய்வூதிய உறுப்பினராகவும் நமது கிளை சங்கத்தில் இணைப்பது என்று ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
3. புதிய உறுப்பினர்கள் Dr.T. எட்மண்டஸ் மற்றும் Dr.S.நக்கீரன் அவர்களுக்கும் உயர்த்தப்பட்ட ஓய்வூதிய நிலுவைதொகை அவர்களது கருவூலத்தில் இருந்து பெறப்பட்டு அவர் அவரது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டது என்பதை நமக்கு தெரியப்படுத்தினார்கள். அவர்கள் இருவருக்கும் இக்கிளை மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. அதேபோல் திருமதி. வினோலியாதாமஸ் அவர்களுக்கும் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் நமது கிளையின் பொறுப்பாளர்களின் முயற்சியால் 09.08.2019 அன்று தரங்கை கருவூலத்தில் இருந்து வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை இச்சங்கம் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறது.
4. 28.09.2019 அன்று, தஞ்சையில் நடைபெற இருக்கின்ற TANRECTAவின் மாநில மாநாட்டு மலர் விளம்பரம் வெளியிடுவதற்காக கிளை பொறுப்பாளர்களால் கீழ்கண்டவர்களிடமிருந்து விளம்பர தொகை பெறப்பட்டது.

   a) தாளாளர் Ln.K.பாண்டியராஜன் அவர்களிடமிருந்து சர்மிளா காடஸ் சீசைட் பள்ளியின் சார்பாக பெறப்பட்ட தொகை ரூ.10,000/-.

   b) ஸ்வர்ணா மரியநாதன் நினைவு நூலகத்தின் நிறுவனரும் நமது கிளையின் தலைவருமாகிய பேரா.அ. அருள்மரியநாதன் அவர்களிடமிருந்து ரூ.3000ம் பெறப்பட்டது.

   c) நிவேதா பஸ் கம்பெனியின் உரிமையாளர் திரு.M.முருகன் அவர்களிடமிருந்து ரூ.1500/- பெறப்பட்டது.

   d) தரங்கை வட்ட ஓய்வுபெற்ற சங்கத்தின் சார்பாக ரூ.750/- பெறப்பட்டது.

   e) Ln.V.S.B. குருசாமி வெள்ளையன் அவர்களிடமிருந்து அவருடைய சரவணா சாமில் நிறுவனத்திற்கு ரூ.750/- பெறப்பட்டது.

   ஆக ரூ.16,000-ம், மாநாட்டு மலர் விளம்பரத்திற்காக பெறப்பட்ட தொகை. இத்தொகை உடனடியாக மலர் வெளியிடும் பொறுப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்வதோடு மேற்கூறிய ஐவரையும் கௌரவித்து நன்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
5. 22.07.2019 அன்று திருச்சி அருண் ஹோட்டலில் நடைபெற்ற TANRECTAவின் புதியதேசிய கல்விக்கொள்கை கருத்தரங்கில், நமது கிளையின் சார்பாக தலைவர் பேரா.அருள்மரியநாதன், செயலர் முனைவர் S. சுகுமார், துணை தலைவர் பேரா. முனைவர் A ராஜன் உறுப்பினர்கள் பேரா. முனைவர் J.P. ஜெயக்குமார் மற்றும் பேரா. முனைவர் பிராங்க் ரெத்னகுமார்





**Next meeting in September 2019 at 4pm in Quaid E Millath College on 14.09.2019.**

**Lawrence,**
Secretary, Chennai Unit, 90877 25798.

## MAYILADUTHURAI UNIT (JULY)

Our monthly meeting of TANRECTA was conducted on 14/7/2019 Sunday at 10 A.M. in Arivalayam Matriculation higher secondary School, Mayiladuthurai. Prof. R.Gnanasekaran welcomed the gathering. Prof. R.Ramakrishnan explained today's situation in pension revision. Prof.Neela was kind enough to to be the host for today's meeting.

Prof.Jayaraman explained the drawbacks in the Hydrocarcarbon project which is being executed in Cauvery Delta Region. Prof. S.Balsubramanian said that the project will generate employment opportunities in the region. This was followed by healthy discussions about the pros and cons of the project. Prof R.Ramakrishnan proposed the vote of thanks.

**S.Murugesan,**
Secretary, Mayiladuthurai.

## MAYILADUTHURAI UNIT (AUGUST)

On Sunday the 11th August 2019 a meeting of Tanrecta was conducted at 10 am in Arivalayam Mat.Hr. Sec School, Mayiladuthurai. Two minutes silence was observed to pay homage to Prof.V.Balasubramanian who passed away recently at Trichy. Prof. R.Gnanasekaran welcomed the gathering.

Income Tax forms were distributed to members who received pension arrears in the financial year 2019-20. Prof.R.Ramakrishnan was kind enough to be the host for the meeting. Prof.M.Tamilarasan proposed the vote of thanks.

Prof.**S.Murugesan,**
Secratary, Mayiladuthurai Unit.

## PUDUKKOTTAI UNIT

The general body was convened on 11-08-19 around 11a.m. Prof.Srikumar chaired the meeting. Prof.P.Annamalai who celebrates his birthday shared his happiness by hosting a tea party. He was honoured

with a shawl. The following resolutions were adopted.

1). The unit wishes Prof. P.Annamalai a very long, happy and healthy life.

2). The unit decided to give the delegate fees for the members attending the annual state conference at Thanjavur.

3). The unit condoled the death of Prof. Rethinasapathy (Retired physical director).

Prof.S.Viswanathan proposed vote of thanks.

**Manivannan.G**
Secretary, Pudukkottai Unit

## திருவண்ணாமலை கிளை

எம் கிளையின் பொதுக்குழுவானது 10.8.2019; சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கிளைத்தலைவர் பேரா.சு.பரந்தாமன் வரவேற்புரையுடன் நடைபெற்றது.

**இரங்கல் நிகழ்வு :** கிளையின் மூத்த உறுப்பினர் பேரா. பெ. சுப்ரமணியகவுண்டர் அவர்களின் மூத்த மகன் சு. ஜெனார்த்தன் மற்றும் ஏனைய கிளைகளின் உறுப்பினர்களின் மரணத்திற்கு இரு நிமிடம் மௌன அஞ்சலி மூலம் உறுப்பினர்கள் ஆழ்ந்த இரங்கலை வெளிப்படுத்தினர்.

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்:** ஆகஸ்டு மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் கு. மாணிக்கம் (முதல்வர் – பொருளியல்); சி. வேலுசாமி (க.க.இணை இயக்குநர் – கணிதம்) ஏ.எஸ்.சண்முகம் (இயற்பியல்) ஆகியோர் நலமும், வளமும் பெற உறுப்பினர்கள் கரவொலி மூலம் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

சங்கத்தின் செயல்பாடுகளை கிளைச்செயலர் உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டார். 22.7.19ல் திருச்சியில் நடைபெற்ற புதிய கல்விமுறை குறித்து தேசிய கருத்தரங்கம் பற்றியும், மாநில செயற்குழுவின் முடிவுகளையும் இணைச்செயலர் விளக்கிக் கூறினார். பேரா.ஜி.சுப்பிரமணியன் அவர்களால் வைக்கப்பட்டு பொதுக்குழு ஒப்புதல் அளித்தது. உறுப்பினர்களின் கருத்துப் பரிமாற்றங்களுக்குப் பின் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. புதிய கல்விக் கொள்கையை முற்றிலும் நிராகரிக்கவேண்டும்,
2. கல்வியை பொதுப்பட்டியலிலிருந்து மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும்,
3. புதிய கல்வி கொள்கையில் மாநிலம் எடுக்கும் முடிவினை ஆதரிப்பது
4. தஞ்சையில் நடைபெறும் 19ஆம் மாநில மாநாட்டிற்கு அதிக எண்ணிக்கையில் கலந்துகொள்ள உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்,
5. மாநில மாநாட்டு மலருக்கு கிளை சார்பாக அரைபக்க விளம்பரம் கொடுக்க அனுமதி அளிக்கப்பட்டது,
6. தணிக்கை குழுத் தலைவருக்கு நன்றியும் பாராட்டுதலும் தெரிவிக்கப்பட்டது,
7. 15.6.2019ல் சென்னையில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் கிளையின் சார்பாகக் கலந்து கொண்ட பேரா.மு.பிரபாகரன் அவர்களுக்கு நன்றியும் பாராட்டுதலும் அளிக்கப்பட்டது,





முடிகிறது என்பதைக் குறிப்பிட்டார். மேலும், விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர். திருமிகு. து. இரவிக்குமார் அவர்கள் நேரடியாக தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களது கோரிக்கைகளுக்கு தீர்வுகாணும் வகையில் முயற்சி மேற்கொள்ளப் போவதாக வாக்குறுதி அளித்துவருவது மிகவும் பாராட்டத்தக்க செயல் என்றும் தெரிவித்தார். கிளைச்செயலர் பேரா. இரா. நிசார் அவர்கள் தமது அறிக்கையில் கடந்த ஒரு மாத காலத்தில் நிகழ்ந்த சங்க செயல்பாடுகளை விவரித்தார். குறிப்பாக, கடந்த 22.07.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற "தேசிய கல்விக்கொள்கை 2019 கருத்தரங்கம்" மற்றும் மாநில செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானங்கள் ஆகியவை தொடர்பான செய்திகளை உறுப்பினர்களிடம் தெரிவித்தார். மேலும், தஞ்சாவூர் கிளைச் செயலரிடமிருந்து பெறப்பட்ட மாநாட்டு சுற்றறிக்கை எண் 1–ல் உள்ள செய்திகளையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

பேரா.பீ. தனஞ்செயன் அவர்கள் நாம் அன்றாட உணவுகளில் சேர்த்துக்கொள்ளும் பொருட்களாகிய "வெள்ளைப் பூண்டு" (Allium sativum) மற்றும் "வெங்காயம்" (Allium cepa) ஆகியவற்றின் மருத்துவப் பயன்களை விவரித்தார். பேரா. முனைவர் ந. கன்னையா அவர்கள் ஏழைகளின் காலை உணவாகிய "பழைய சோறு" உண்பதால் நமக்குக் கிடைக்கும் மருத்துவப் பயன்களை விவரித்தார். இம்மாதம் பிறந்தநாள் காணும் பேரா. பி. கோவிந்தன், பேரா. இரா. நிசார், பேரா. வெ. மனோகரன் மற்றும் பேரா. முனைவர் எஸ். திருநாவுக்கரசு ஆகியோர்க்கும், இம்மாதம் மணநாள் காணும் பேரா. முனைவர் எஸ். கோவிந்தராசலு, பேரா. வெ. மனோகரன், பேரா. முனைவர் ந. கன்னையா மற்றும் பேரா.அ. கிருபானந்தம் ஆகியோர்க்கும் வருகைபுரிந்த உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். கிளைப் பொருளாளர் பேரா. மு. வரதராசலு அவர்களது நன்றியுரைக்குப்பின் கூட்டம் நிறைவடைந்தது.

**அடுத்த மாதக்கூட்டம் 14.09.2019 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும்.**

பேரா. **இரா. நிசார்,**
செயலர், விழுப்புரம் கிளை. 9944165596.

## பொறையார் கிளை

ஓய்வுபெற்ற கல்லூரி பேராசிரியர்களின் பொறையார் கிளையின் ஆகஸ்ட் மாத கூட்டம் கடந்த 10.08.2019 அன்று தரங்கை வட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்க கட்டிடத்தில் தலைவர் பேரா.அ. அருள்மரியநாதன் தலைமையில் நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆவன:

1. கடந்த 01.08.2019 அன்று தனது 64வது பிறந்தநாளை கொண்டாடிய உறுப்பினர் பேரா. J.P. செல்வராஜ் அவர்களுக்கு இம்மன்றம் உரிய வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டது.

வழங்கப்பட்டபோது கூடுதலாக நிலுவைத் தொகை வழங்கப்பட்டது. அதனை ஒரே தவணையில் திரும்ப செலுத்துமாறு கடிதம் வந்தது. அவகாசம் தராமல் 125% அகவிலைப்படியை பிடித்து விட்டனர். அதனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் தடையாணை பெற்றோம். தற்போது UGC GO 145 திருத்திய ஓய்வூதியம் தரவில்லை. கூறும் காரணம் :

தங்கள் தடையாணை இடைக்காலத்தடை. அதை எதிர்த்து நாங்கள் வழக்கு தொடர்ந்துள்ளோம். அந்த தீர்ப்பு பார்த்துதான் முடிவு செய்யமுடியும் என்பதாகும். உயர்நீதி மன்றத்தில் நமக்காக வாதிட்ட வழக்குரைஞர் திரு சுப்பிரமணியம் அவர்களை தொடர்பு கொண்டபோது 32 வழக்குகள் நிலுவையில் உள்ளன. நீதி மன்றம் இன்னமும் விசாரிக்காமல் உள்ளது என நொந்து போனார்.

ஆனாலும் GO 245ன் பயன்களை தந்தாக வேண்டும். அரசுக்கு முறையிடுங்கள் என்று கூறினார்.

கிளையின் புதிய உறுப்பினர் ஆக Dr P R Rajkumar முதல்வர் ஓய்வு பெரியார் கல்லூரி கடலூர் சேர்ந்துள்ளார் அவரை வாழ்த்தி வரவேற்கிறேன்.

தஞ்சையில் நடைபெறவுள்ள 19 வது மாநாடு சிறக்க வாழ்த்து செய்தியும் கிளையின் திருத்தப்பட்ட உறுப்பினர்களின் முகவரி பட்டியலும் அனுப்பப்பட்டன.

முனைவர் **இளங்கோவன் க,**
செயலாளர், சிதம்பரம் கிளை.

## விழுப்புரம் கிளை

விழுப்புரம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 10.8.2019 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு விழுப்புரம் வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கிளைத் தலைவர் பேரா. இரா. இராசசேகரன் அவர்களது தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் முதல் நிகழ்வாக இக்கிளையின் மூத்த உறுப்பினர் பேரா. முனைவர் அ. குமாரராசு அவர்களது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனம் கடைபிடித்தனர். மறைந்த பேரா. குமாரராசு அவர்களது நற்பண்புகளையும், முற்போக்கு சிந்தனைகளையும் நினைவுகூர்ந்து அன்னாரை சில பேராசிரியர்கள் பாராட்டினார் தனஞ்செயன் அவர்கள் வரவேற்று உரையாற்றினார். “திங்கள் ஒரு குறள்” என்ற வகையில் பேரா. முனைவர் மா. சற்குணம் அவர்கள் “நன்றியில் செல்வம்” என்னும் அதிகாரத்தில் பின்வரும் குறளின் விளக்கத்தினை அளித்தார்.

**“சச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்**
**நச்சு மரம் பழுத்தற்று” (குறள் 1008)**

கிளைத்தலைவர் தமது தலைமையுரையில் நமது கழகத்தின் ஆண்டுமலரில் உறுப்பினர்களின் முகவரிகளுடன் தொலைபேசி எண்களையும் வெளியிடுவதால் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஓய்வுபெற்ற பேராசிரியர்களுடன் தொடர்புகொள்ள





8. AIFRUCTO வாழ்நாள் உறுப்பினராக இணைத்துக் கொண்ட பேரா.ஜி. சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றியும் பாராட்டுதலும் தெரிவிக்கப்பட்டது.

கிளை இணைச்செயலர் பேரா.வ.மணிவண்ணன் அவர்களின் நன்றியுரையுடன் பொதுக்குழுவானது இனிதே நிறைவுற்றது.

பேரா. **கு. மகாலிங்கம்,**
செயலர், திருவண்ணாமலை கிளை.

## குடியாத்தம் கிளை

குடியாத்தம் கிளையின் பொதுக்குழு கூட்டம் 03.08.2019 அன்று அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரியில் அறை எண் 8இல் காலை 11.00 மணிக்கு பேரா.முனைவர் எஸ். பாபு, கிளைத்தலைவர் தலைமையில் நடைபெற்றது. கிளைச்செயலர் பேரா.முனைவர் கு. நடராசன் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். எங்கள் கிளையின் பொதுக்குழுவை சிறப்பிக்கும் வகையில் நமது மாநில தலைவர் பேரா. முனைவர் து.ந. கோகுல்நாத் பாபு அவர்கள் கலந்து கொண்டார். 22.07.2019 அன்று திருச்சி நகரில் நடைபெற்ற தேசிய கல்விகொள்கை கருத்தரங்கம் மற்றும் மாநில செயற்குழு செய்திகளை தலைமையுரையில் தலைவர் விவரித்தார்.

நமது கழகத்தின் நிலுவையிலுள்ள கோரிக்கைகள் மற்றும் தேசிய கல்விக்கொள்கை ஆகியவைகளை பற்றி மிக விரிவாக நமது மாநில தலைவர் பேரா. முனைவர் து.ந. கோகுல்நாத் பாபு அவர்கள் விளக்கினார். பிறகு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய நிதிகளை பற்றி பொருளர் பேரா. முனைவர் சு. சக்கரவர்த்தி கூறி, நன்றி கூறவும் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**அடுத்த மாத கூட்டம் 07.09.2019 அன்று இதே கல்லூரி வளாகத்தில் காலை 11.00 மணிக்கு தொடங்கும் என தெரிவிக்கலாகிறது.**

பேரா. **கு. நடராசன்,**
செயலர், குடியாத்தம் கிளை.

## தஞ்சாவூர் கிளை

எமது கிளையின் மாதாந்திர பொதுக்குழுக்கூட்டம் 10.08.2019 இரண்டாவது சனிக்கிழமையன்று காலை 10.30 மணிக்கு தஞ்சை மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் கூடியது. சிறப்பு அழைப்பாளர்களாக நமது அமைப்பின் மாநிலத்தலைவர் பேரா.டி.என். போகுல்நாத்பாபு, மாநிலப் பொதுச்செயலாளர் பேரா.இ.பி.பெருமாள், மாநிலப் பொருளாளர் பேரா. எம்.பாலசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளைத்தலைவர் பேரா. P. குமாரவேலு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தினார். கிளைப்பொருளாளர் பேரா.ஆ.இராமகிருஷ்ணன் கூட்டத்தினரை வரவேற்றுப் பேசினார். முதற்கண் 13.07.2019 அன்று இயற்கை

எய்திய எமது கிளை உறுப்பினர் பேரா.எம்.முத்துசாமி அவர்களுக்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் ஆகஸ்ட் மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் ஆ.தணிகாசலம், எ.ஆர்.எலிசபெத், எஸ். சந்திரசேகரன், மு. இளமுருகன், அ.செ. கிளாடிஸ், ஜெயக்கொடி கௌதமன், எஸ்தர்ராணி வில்சன் மற்றும் எஸ்.எஸ். இராஜேந்திரன் ஆகியோருக்கு கிளையின் சார்பாக இனிய பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்த பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் முனைவர்.மு. இளமுருகன், முனைவர். எஸ். சந்திரசேகரன், முனைவர் ஜெயக்கொடி, கௌதமன் ஆகியோருக்கு மாநிலப் பொறுப்பாளர்கள் கைத்தறியாடை அணிவித்து சிறப்பித்தனர்.

பின்னர் கிளைச்செயலாளரும் மாநில மாநாட்டின் ஒருங்கிணைப்பாளருமாகிய முனைவர் வே. இராமசாமி மாநில மாநாட்டிற்கான ஏற்பாடுகளை எடுத்துரைத்தார். மாநாட்டிற்கான உத்தேச செலவினங்களையும் அதற்கான நிதி ஆதாரங்களையும் விளக்கி, உறுப்பினர்கள் தங்களது மேலான ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொண்டார். ஓய்வூதியத் திருத்தம் தொடர்பாக கிளைப் பொறுப்பாளர்களின் தொடர் நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

மாநிலத் தலைவர் பேரா.டி.என். கோகுல்நாத்பாபு அவர்களும் மாநிலப் பொருளாளர் எம். பாலசுப்ரமணியன் அவர்களும் மாநில மாநாட்டின் முக்கியத்துவம் பற்றியும் தலைமைக்கழகம் அனைத்து உதவிகளையும் செய்யும் என்றும் எடுத்துரைத்தனர். இறுதியாக மாநிலப் பொதுச்செயலாளர் பேரா.இ.பி.பெருமாள் AIFRUCTO, TANRECTA ஆகியவற்றின் பங்களிப்பை விளக்கி, நாம் பல்வேறு சாதனைகளையும் உரிமைகளையும் வென்றெடுக்க நமது அமைப்புகள் காரணம் என்பதை எடுத்துரைத்தார். உறுப்பினர்கள் சோர்ந்துவிடாமலும் தொய்வடையாமலும் இருக்க மாநில மாநாடு தேவை என்பதையும் விளக்கினார்.

சுவையான சிற்றுண்டி வழங்கிய பிறந்தநாள் கண்ட பேராசிரியர்கள் மு. இளமுருகன், எஸ். சந்திரசேகரன், ஜெயக்கொடி, கௌதமன் மற்றும் ஏ.ஆர்.எலிசபெத் ஆகியோருக்கு கிளையின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. இறுதியில் கிளைத்தலைவர் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

**கிளையின் அடுத்த பொதுக்குழுக்கூட்டம் 14.9.2019 அன்று காலை 10.30 மணிக்கு மன்னர் சரபோசி அரசுக் கல்லூரியில் நடைபெறும்.**

**தீர்மானம்:**

மாநில மாநாடு தொடர்பான செலவுகளுக்காக கிளை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ரூ.5000/- நன்கொடை வழங்குவதெனத் தீர்மானிக்கப்படுகிறது.

பேரா. **வே. இராமசாமி,**
செயலர், தஞ்சாவூர் கிளை





கருத்தரங்கின் முக்கிய நிகழ்வுகளையும் அன்று மாலை நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் எடுத்த முடிவுகளையும் அவர் பகிர்ந்து கொண்டார். மேலும் அவர் 28.9.2019 சனிக்கிழமை தஞ்சாவூரில் நடைபெற உள்ள TANRECTA வின் 19 ஆவது மாநில மாநாட்டில் அதிகம் பேர் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கலந்து கொள்ளும் அனைவருக்கும் பயணப்படி மற்றும் பேராளர் கட்டணம் (Delegate Fee) வழங்கப்படும் எனத் தெரிவித்தார். பொது குழு உறுப்பினர் பேரா. S. இம்மானுவல் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**கிளையின் செப்டம்பர் மாதக் கூட்டம் 10.9.2019 இரண்டாம் செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். அன்று அரசு விடுமுறை (மொகரம் பண்டிகை) என்பதால் அது சிறப்பு கூட்டமாக நடைபெறும். அன்று TANRECTAவின் மாநில தலைவர்கள் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் நமது உறுப்பினர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் முறையே ரூ.400/-(நானூறு) செலுத்தாதவர்கள் கிளையின் வங்கிக் கணக்கில் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Account No : 505561496; Indian Bank, Melur Branch, Tuticorin
IFSC Code : IDIB000M083 A/c Name. Tamilnadu Retired College Teacher's Association, Thuthukudi.

பேரா. **ம. கமல்ராஜ்,**
செயலர், தூத்துக்குடி கிளை. 94423 06905.

## சிதம்பரம் கிளை

சாலை விபத்தில் எனக்கு கணுக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருவதால் ஜுன் மாதம் தொடங்கி கூட்டங்கள் நடத்த இயலாமல் போனது. இக்கால கட்டத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் நேரிலும் தொலைபேசியிலும் நலம் விசாரித்தமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இருப்பினும் கிளையின் அலுவல்களைச் செய்து வருகிறேன். பொருளாளர் பேராசிரியர் எஸ் சிவக்குமார் பேராசிரியர் ஜி. தர்மலிங்கம் மூலம் கருவூலத்தில் இருந்து அனைவரின் FORM 16 பெறப்பட்டு ஆடிட்டரிடம் தரப்பட்டது. ஒரு சிலருக்கு கூடுதலாக வரி கட்டவேண்டியுள்ளது. ஏன் எதற்காக எனும் வினாக்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. 90வயதான 1985ல் ஓய்வு பெற்ற பேராசிரியர் பி. கனகசபை அரசாணை 245ன் படி முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டுகள் பணிக்காலம் போதுமானது என்பதால் ஓய்வூதியத்தை மறுநிர்ணயம் செய்து ஆணை வந்துள்ளது. இருப்பினும் அதை ஏற்க இயலாது என்று கருவூலத்தினர் கூறிவிட்டனர். காரணம் : 2009 இல் UGC GO 350 படி திருத்தப்பட்ட ஓய்வூதியம்

மதுரைச் சிறையிலும், மூத்த அண்ணன் அலிகார் சிறையிலும் விடுதலைப் போராட்டத்தில் விடுபட்டுச் சிறை புகுந்தனர். செயலரின் பேச்சைத் தொடர்ந்து பேராசிரியை மரகதம் சிவானந்தம் விடுதலை பெற்ற இந்தியாவில் எவ்வாறு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதென்று குறிப்பிட்டார். திருவாவடுதுறை ஆதினத்தார் செய்தனுப்பிய செங்கோலைக் கொடுத்துத்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதென்றார்.

பொருளாளர் பேராசிரியர் மேஜர் R. முருகேசன் வரவு செலவுக் கணக்குகளைச் சமர்ப்பித்தார்.

**தீர்மானங்கள் :**

1. அஞ்சலட்டைகள் கிடைக்காததால் மாதாந்திரக் கூட்ட அறிவிப்புகளை வாட்ஸ்அப் குரூப் ஏற்படுத்தித் தெரிவிக்கலாமென தீர்மானிக்கப்பட்டது.
2. மாதாந்திரக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்க்கிழமைகளில் நளபாகம் விழா அரங்கில் நடைபெறும். பல உறுப்பினர்கள், ஒரு மாதம் பகலிலும் மறுமாதம் மாலையிலும் கூட்டம் நடத்துமாறு கூறினார்கள். செப்டம்பர் மாதக் கூட்டத்தில் அதை முடிவுசெய்து கொள்ளலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

**இரங்கல் செய்தி :**

நம் பழனிக்கிளை உறுப்பினர் பேராசிரியை ரேணுகாதேவியின் தமக்கை இயற்கை எய்தியதற்கும், பழனி A.P.A கல்லூரி அலுவலக பொறுப்பாளர் ஞானசுந்தரம் இயற்கை எய்தியதற்கும் நம் கூட்டத்தில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் அமைதி காத்து அஞ்சலி செலுத்தினர். இணைச்செயலர் நன்றி கூறிய பின் கூட்டம் நிறைவுற்றது.

**பழனிக் கிளையின் செப்டம்பர் மாதக் கூட்டம் 10.9.2019 செவ்வாய்க் கிழமை பகல் 11 மணிக்கு நளபாகம் விழா அரங்கில் நடைபெறும்.**

பேரா. **துரை. சுந்தர மூர்த்தி,**
செயலர், பழனிக் கிளை.

## தூத்துக்குடி கிளை

எமது கிளையின் ஆகஸ்ட் மாதக் கூட்டம் 13.08.2019 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு துணைத் தலைவர் பேரா P. அலெக்ஸ்சாண்டர் கனகராஜ் தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்று பேசினார்.

24.07.2019 அன்று காலமான எமது உறுப்பினர் பேரா. ஜவன் பாலசிங் அவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னாரின் பண்பு நலன்களைப்பற்றி இணைச் செயலர் பேரா. M.J. இன்பநாயகம் மற்றும் முனைவர் P. டென்சிங் ஆகியோர் உரையாற்றினார்கள்.

செயலர் ம.கமல்ராஜ் 22.7.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற தேசிய கல்வி கொள்கை வரைவு 2019 பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டார்.





## மதுரை கிளை

13.8.19- அன்று காலை 11.00 மணிக்கு, பேரா. V. சண்முகசுந்தரம் அரங்கு, மூட்டா அலுவலகத்தில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்திற்கு தலைவர் பேரா. C.K. மதுரம் தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றார். உறுப்பினர் பேரா. P. சரோஜா, பேரா. K.V. ராமகோட்டி, முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவர்கள் மறைவிற்கும், இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உறுப்பினர்கள் எழுந்து நின்று, 2-நிமிடம் அமைதி காத்து, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். இந்த மாதம் பிறந்தநாள் கொண்டாடும் பேராசிரியர்களின் பெயர்களை, இணைச் செயலாளர் முனைவர் S. சேது ராக்காயி வாசிக்க, உறுப்பினர்கள் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். அவர்கள் (2பேர்), கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு, மரியாதை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகளையும், ஆண்டறிக்கையையும், செயலாளர் பேரா. G. ராமமூர்த்தி வாசித்தார். புதிய தேசிய கல்விக்கொள்கை சம்பந்தமாக, 3முறை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பேராசிரியர்கள் இதில் கலந்து கொண்டு, சிறப்பாக தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். தேர்வு எழுதாமலேயே, சான்றிதழ் வழங்கிய கொடுமை, நம் பல்கலைக் கழகத்தில் நடந்திருப்பது, வெட்கக்கேடானசெயலாகும் என்றார். மூட்டா நடத்திய பேரா. V. சண்முக சுந்தரம் நினைவு தின விழாவில், நம் உறுப்பினர்கள் 6பேர் கலந்துகொண்டது, பெருமைக்குரியதாகும் என்றார். சென்ற மாதம், டெல்லியில் AIFRUCTO செயற்குழு நடந்தது பற்றியும் தெரிவிக்கப்பட்டது.

22.7.2019- அன்று திருச்சியில் நடைபெற்ற மாநிலம் தழுவிய "தேசிய கல்விக்கொள்கை" -பற்றியது. கருத்தரங்கில் கலந்து கொள்ளாத பேராசிரியர்கள் வரைவு அறிக்கையை தெரிந்து கொள்ள, கையேடுகள் வெளி யிட்டு, உறுப்பினர்களை ஆர்வப்படுத்த, நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது. தணிக்கை செய்யப்பட்ட வருடாந்திர வரவு – செலவு அறிக்கையை தாக்கல் செய்யவும், பன்னாட்டு சுற்றுலா செல்ல முடிவு எடுக்கவும், செயற்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டது பற்றி, உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஓராண்டாக, கிளை மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் பற்றியும், சமூக செயல்பாடுகள் பற்றியும், செயலாளர் ஆண்டறிக்கை தெரிவித்தார்.

பேராசிரியர்கள் G. கிரிதரன் மற்றும் V. பெருமாள், உள் தணிக்கையாளர்களாகச் செயல்பட்டு அளித்த வரவு – செலவு கணக்கை (2018-19), பொருளாளர் முனைவர் A. மனோகரன், கூட்டத்தில் தாக்கல் செய்தார். அது, அனைவராலும் கைதட்டி ஏற்றுக் கொள்ளப்பட்டது. TANRECTA செய்திகளை, மாநிலத் தலைவர் பேரா. T.N. கோகுல்நாத் பாபு விளக்கிக் கூறினார்.

TANRECTA -வின் 19-ஆவது மாநில மாநாடு, தஞ்சாவூரில் நடைபெறுவது பற்றி விரிவாகப் பேசப்பட்டது. இதில் நம் கிளை சார்பாக, 25பேர் கலந்து

கொள்வதாக, உறுப்பினர்கள் உறுதி கூறினர். இதற்கான வாகனம் ஏற்பாடு செய்து, அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கப்படும், என செயலாளர் கூறினார். ஆண்டு மலரில் விளம்பரம் செய்ய, 30 உறுப்பினர்கள், தலா ரூ.500/– தருவதாகத் தெரிவித்தனர். கதை, கட்டுரை, பயனுள்ள செய்திகளை, உறுப்பினர்கள் எழுதி அனுப்ப செயலாளர் கேட்டுக் கொண்டார். வழக்கம்போல், செயலாளர் இந்த ஆண்டு மலரில் ஒரு கட்டுரை எழுத இருப்பதாகத் தெரிவித்தார். பேரா. நரசிங்கம் அறக்கட்டளை மூலம் நிதி உதவி பெற, "ராயல் விஷன்"– மாற்றுத் திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனத்தை, நம் கிளை உறுப்பினர்கள் முன்மொழிந்தனர்.

வியட்நாம் – கம்போடியா சுற்றுலா செல்வது குறித்து, உறுப்பினர்களிடையே பேசப்பட்டது. இதில் பேரா. T.N. கோகுல்நாத் பாபு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து, சம்பந்தப்பட்ட "Tour operator" -இடம் பேசி ஏற்பாடு செய்யக் கேட்டுகொள்ளப்பட்டது. சென்ற மாதங்களின் கூட்டத்திற்கான சாப்பாடு செலவு விவரங்களை, செயலாளர் பேரா. G. ராமமூர்த்தி, உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தார். பொருளாளர் முனைவர் A. மனோகரன் நன்றி கூறினார்.

**தீர்மானங்கள் :**

1. திருநெல்வேலி மாற்றுத் திறனாளி மாணவர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் சேர, உரிய உயர் நீதிமன்ற, உச்சநீதி மன்ற ஆணை பெற்றும், அவனை அங்கு சேர்ப்பதற்கு, தடைகளை ஏற்படுத்திய அரசு இயந்திரத்தை வன்மையாக கண்டிக்கிறோம். தமிழக அரசு ஆதரவற்ற மாணவர்கள் மீது, இதுபோன்ற தேவையற்ற தடைகளை இனி மேலும் ஏற்படுத்தக் கூடாது, என்று இம்மன்றம் வலியுறுத்துகிறது.
2. கீழ்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை முழுவதும் பறிக்கும் 8–வழிச் (சேலம்) சாலை திட்டத்தை, உடனடியாக கைவிட தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.
3. 1980 – 85– ஆண்டுகளில் பணியமர்த்தப்பட்ட கல்லூரி ஆசிரியர்களுக்கு (அரசு உதவி பெறும்/ அரசு), உடனடியாக ரூ.14,940/– சம்பள அலகை அமல்படுத்த இனியும் தாமதிக்காது, சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க, தலைமையை இம்மன்றம் கேட்டுக் கொள்கிறது.
4. மாநில மாநாட்டில் வெளியிடப்படும் ஆண்டு மலரில், நம் கிளை சார்பாக 5 பக்கங்கள் விளம்பரத்தை, நம் உறுப்பினர்கள் சார்பாக அளிப்பது என முடிவாற்றப்பட்டது.

**நிதிப் பரிவர்த்தனை மேற்கொள்ள விவரம் :**

வங்கி : Indian Overseas Bank, Madurai main.

S.B. A/c - 004901000034557, IFSC- IOBA0000049

பெயர் : TAMILNADU RETIRED COLLEGE TEACHERS ASSOCIATION

வங்கிப் பணப் பரிமாற்றம் செய்பவர்கள், உடனடியாக பொருளாளருக்கு SMS அனுப்பவும்.





**உறுப்பினர் கட்டண விவரம் :** TANRECTA ஆண்டுசந்தா ரூ.500/=, TANRECTA Speaks ரூ.200/=, AIFRUCTO ஆயுள்சந்தா ரூ. 1000/=, TANRECTA வளர்ச்சி நிதி ரூ. 500/=, பேரா. நரசிங்கம் அறக்கட்டளை ரூ.500/= ஆக மொத்தம் ரூ. 2700/= ஆண்டுக்கு

**அடுத்த மாதக் கூட்டம் : நாள்: 9.9.2019 திங்கள் – காலை 10.30 மணி மூட்டா அரங்கு, உறுப்பினர்கள் தவறாது வருக.**

பேரா. **G. ராமமூர்த்தி,**
செயலர், மதுரை கிளை.

## பழனி கிளை

பழனிக் கிளையின் ஆகஸ்ட் மாதக் கூட்டம் 13.8.2019 செவ்வாய்க் கிழமை பகல் 11 மணிக்கு நளபாகம் உணவகத்தில் விழா அரங்கில் நடைபெற்றது. இந்திய நாட்டின் 73–வது விடுதலைத் திருநாளைப் போற்றும் கூட்டமாகவும் அமைந்தது. கிளைத் தலைவர் பேராசிரியர் S. இரத்தின சபாபதி தலைமை ஏற்றார். இறைவணக்கப் பாடலையும் அவரே பாடினார். துணைத் தலைவர் பேராசிரியர் P. சுப்பிரமணியன் நம் கிளையின் பேராசிரியர்கள் N. பாலமுருகன், T. இராஜாமணி ஆகியோருக்குப் பிறந்தநாள் வாழ்த்துரைத்தார். 22.7.2019ஆம் நாளன்று திருச்சியில் நடைபெற்றப் புதிய கல்விக் கொள்கைக் கருத்தரங்கில் நடைபெற்ற நிகழ்வுகளையும் விரித்துரைத்தார்.

நம் பழனிக் கிளையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் இரத்தினகிருட்டிண மூர்த்தி இந்திய நாட்டின் 73வது விடுதலைத் திருநாளை வாழ்த்திப் பேசினார்.

TANRECTAவின் மாநில மாநாடு தஞ்சைத் தரணியில் 28.9.2019–ல் நடைபெறுகிறது. அம்மாநாட்டில் பங்கேற்றிடப் பழனிக் கிளையின் உறுப்பினர்களை அன்புடன் அழைத்தார் பேராசிரியர் S. நாகலிங்கம். அவருடன் பேராசிரியர்கள் K. கல்யாணசுந்தரி, மரகதம் சிவானந்தம், P. சுப்பிரமணியன் ஆகியோர் சுற்றுலா ஏற்பாடுகளைச் செய்கின்றனர். மாநாட்டு மலருக்கான விளம்பரங்களைப் பெறுவதில் ஆட்சிக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

மாநிலத் துணைத் தலைவர் பேராசிரியர் N. மாரிசாமி 22.7.2019ஆம் நாளன்று திருச்சியில் நடைபெற்றப் புதிய கல்விக் கொள்கை கருத்தரங்கில் வெளிப்பட்டக் கருத்துக்களின் அடிப்படையில் TANRECTA மேற்கொண்டுள்ளத் திருத்தங்களின் சாராம்சத்தை சுருக்கமாகச் சொன்னார். அவரைத் தொடர்ந்து மையமன்ற இணைச்செயலர் பேரா. S. சிவசண்முகம் புதிய கல்விக் கொள்கை இளைய பாரதத்தினருக்குக் கல்விச் சீரழிவுகளையே உண்டாகும் என்றார். சிறார்கள், இளைஞர்கள் தடையின்றிக் கற்று உயர்கல்வி மேன்மைகளை எளிதில் பெற முடிந்தால்தான் புதிய கல்விக்கொள்கை சிறக்கும் என்றார்.

22.7.2019 மாலையில் நடைபெற்ற செயற்குழு பற்றிய செய்திகளை செயலர் பேராசிரியர் துரை. சுந்தரமூர்த்தி எடுத்தியம்பினார். செயலரின் தந்தை

## காஞ்சிபுரம் கிளை

எமது கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டம் 21.09.2019 புதன் அன்று காலை 10.00 மணியளவில் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் தலைவர் பேரா.எம்.எஸ் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் நடந்தது. கடும் வெப்பம் காரணமாக மே மாத கூட்டமும் “கோரம்” இல்லாத காரணத்தால் ஜுன் மாதக் கூட்டமும் ஆதி அத்திவரதர் வைபவத்தின் காரணமாக ஜுலை மாத கூட்டமும் நடத்த இயலவில்லை.

வந்திருந்த உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசிய பின்னர் நிகழ்வுகள் விவாதத்திற்கு ஏற்கப்பட்டன.

**விவாத விபரங்களும் ஏற்கப்பட்ட தீர்மானங்களும்:-**

1. கடந்த 3 மாதங்களில் நடந்த இயக்க மற்றும் கிளை நடவடிக்கைகளை செயலர் எடுத்துரைத்தார்.
2. மைய அரசின் வரைவு புதிய கல்விக் கொள்கையின் சாதக பாதக அம்சங்களை உறுப்பினர்கள் விவாதித்தனர். கடந்த 22.07.2019 அன்று திருச்சியில் நமது இயக்கம் நடத்திய கருத்தரங்கின் பரிந்துரைகளை மைய அரசுக்கு அனுப்பப்படும் என்கிற தகவலை உறுப்பினர்கள் வரவேற்கின்றனர்.
3. 7-வது மைய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி வெளியிடப்பட்ட 06.07.18 தேதியிட்ட உயர் கல்வி துறையின் அரசு ஆணை எண் 145-ன் படி இதுவரை உயர்த்தப்பட்ட புதிய ஓய்வூதியம் கிடைக்கப்பெறாதப் பேராசிரியர்களின் கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றிட ஆவண செய்ய கிளை மற்றும் மையப் பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. 15.06.19 அன்று சமூக முன்னேற்றத்தில் பெண்கள் பங்கு குறித்த 2-வது மாநில மகளிர் மாநாடு சிறப்புடன் நடத்தியமைக்கு சென்னை கிளை பொறுப்பாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இப்பொதுக்குழு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
5. புதியதாக துவக்கப்பட்ட பொறையார், உடுமலைப்பேட்டை மற்றும் குடியாத்தம் கிளை பொறுப்பாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்படுகிறது.
6. 2019 - 20 ஆம் ஆண்டிற்கான வருமானவரி பிடித்தம் செய்வதைப்பற்றியும் 31.08.2019-க்குள் வருமானவரிப் படிவங்களை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

TANRECTA SPEAKS SEPTEMBER - 2019

7. ஆண்டுச் சந்தாவையும் ஆயுள் சந்தாவையும் விரைந்து செலுத்துமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
8. புதிய உறுப்பினர்கள் இயக்கத்தில் இணைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. 01.01.19 முதல் அகவிலைப் படியை 9% லிருந்து 12% மாக உயர்த்தி வழங்கிய மாநில அரசுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது.
10. மே, ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் பிறந்த உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.
11. மாதாந்திர பொதுக்குழுக் கூட்டத்தை முன்போல இரண்டாவது சனிக்கிழமை நடத்துவதற்கு சாத்தியமில்லை எனவும் இது குறித்து பின்னர் முடிவு செய்யலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.
12. நமது இயக்கத்தின் 19 வது மாநில மாநாடு 28.09.2019 அன்று தஞ்சையில் நடைபெறும் என்கிற தகவலும் கட்டுரைகள் கவிதைகள், விளம்பரங்கள் ஆகியன 26.08.2019க்குள் அனுப்ப வேண்டும் என்கிற தகவலும் தெரிவிக்கப்படுகிறது.
13. உயர் துவக்க ஊதியம் ரூ.14,940/- அரசு நிதியுதவி பெறும் கல்லூரி பேராசிரியர்களுக்கும் பதவி மேம்படுத்தப்பட்டவர்களுக்கும் வழங்கிட ஆவணம் செய்யுமாறு மையப் பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
14. கருவூலம் வாயிலாக வழங்கி உள்ள அடையாள அட்டையை இ-சேவை மையம் மூலம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தனது 82வது பிறந்தநாள் முன்னிட்டு தேநீர் வழங்கிய மூத்த உறுப்பினர் பேரா. ஏ. அருணாசலம் அவர்களுக்கு நன்றி செலுத்த செயலர் **அடுத்த மாத கூட்டம் 11.09.2019 அன்று என அறிவித்தபின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.**

பேரா. **இ.எம். சுப்ரமணியன்**
செயலர், காஞ்சிபுரம் கிளை